24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 116 பங்குனி 09ஆம் நாள் சனிக்கிழமை 23 மார்ச் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



## காணி சுவீகரிக்கப்படலாம் அச்சத்தால் திரண்ட மக்கள்

*கீரிமலையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், மார்ச் 23
கீரிமலையில் கடற்படைத் தளம் அமைப்பதற்கு காணி சுவீகரிக்கப்படலாம் என்ற அச்சத்தில், >> 19

ஐ.நாவில்

## வெளிநாட்டு நீதிபதிகளை நிராகரித்து நாட்டின் சுயாதீனத்தை பாதுகாத்தோம்

*ரணில் வெற்றிப் பெருமிதம்*

கொழும்பு, மார்ச் 23
வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறையை ஜெனிவாத் தொடரில் நிராகரித்ததன் மூலம் இலங்கையின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார். இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சரான தேசபிதா டி.எஸ்.சேனநாயக்கவின் 67ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் >> 07

## வறட்சியால் மின் தடை

சுழற்சி முறையில் தொடரும்

கொழும்பு, மார்ச் 23
நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய மழை இல்லாமை காரணமாக நாடு முழுவதும் சுழற்சி முறையிலான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மின் சக்தி அமைச்சு அறி >> 19

வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணைக்கு மறுத்தால்

# பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையைக் கொண்டு செல்வோம்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 23
ஐ.நா. தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்கியதன் மூலம், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைக்கு இலங்கை அரசு மூன்றாவது தடவையாகவும் இணங்கியுள்ளது. இனியாவது பன்னாட்டுச் சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். இல்லாவிடின் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டுசெல்வோம். >> 19



## செயற்கை மழை திட்டம் வெற்றி

கொழும்பு, மார்ச் 23
இலங்கையில்செயற்கை மழை பொழிவதற்கு நேற்றுக் காலை 11 மணியளவில் இரசாயனப் பதார்த்தம் வான்படை வானூர்தி மூலம் தூவப்பட்டதையடுத்து பகல் 1 மணி முதல் 1.45 மணி வரை மழை பெய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட் >> 07

## மன்னார் புதைகுழி விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

மன்னார், மார்ச் 23
மன்னாரில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான துறைசார்ந்த அறிக்கைகளை மூன்று மாதங்களுக்குள் பெற்றுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரண்டு மணித்தியாலக் கலந்துரையாட >> 07



## மன்னாரில் மீண்டும் இந்து ஆலயம் மீது தாக்குதல்

*அம்மன் சிலை உடைப்பு*

மன்னார், மார்ச் 23
மன்னார் மாவட்டத்தில் திருகேதீச்சர ஆலய அலங்கார நுழைவாயில் உடைக்கப்பட்ட சம் >> 07



புத்தளத்தில் பதற்றம்!

## போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி >> 07

## அல்லைப்பிட்டி விபத்தில் குடும்பத் தலைவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 23
அல்லைப்பிட்டியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார். அளவெட்டியைச் சேர்ந்த இளம் குடும்பத் தலைவரான நாகராசா நிதர்சன் (வயது-21) இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் ஊர்கா >> 19

## வடக்கில் இன்று வெப்பம் உச்சம்

கொழும்பு, மார்ச் 23
வடக்கு மாகாணத்தின் 4 மாவட்டங்கள் உள்ளடங்கலாக நாட்டின் 9 மாவட்டங்களில் இன்று சனிக்கிழமை கடும் வெப்பமான காலநிலை நிலவும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேற்படி எச்சரிக்கை >> 07

## தமிழர்கள் கோத்தாவுக்கு வாக்களிக்க மாட்டார்கள்

ஐ.தே.க. நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 23
மகிந்த தரப்பு எந்த வேட்பாளரைக் களமிறக்கினாலும் அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள். தமிழ் மக்கள் ஒருபோதும் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவிய >> 07

கோத்தாவை ஆதரிக்க

## யாழிலிருந்து 40பேர் கொழும்பு பயணம்

கொழும்பு, மார்ச் 23
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச களமிறங்குவது பெரும்பாலும் உறுதியாகி விட்ட நிலையில், அவருக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. கொழும்பு பத்திரமுல்லையில் நாளை இடம்பெறவுள்ள கூட்டத்துக்கு யாழ் >> 19

## நீதிமன்றில் கழுத்தை அறுத்த நபர்

வவுனியா, மார்ச் 23
ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், கைதி ஒருவர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் வவுனியா >> 19

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## கும்ப ராசி அன்பர்களே!

*கொள்கைப்பிடிப்பு கொண்ட கும்பராசி அன்பர்களே! உங்களுக்கு 13.2.2019 முதல் 31.8.2020 வரை ராகுவும் கேதுவும் பல மாற்றங்களையும் மகத்துவங்களையும் அருளப் போகிறார்கள்.*




**ராகு பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு ஆறாம் வீட்டில் அமர்ந்துகொண்டு பணவரவையும், பிரபலங்களின் நட்பையும் ஒருபுறம் தந்தாலும் மறுபுறம் வீண் அலைச்சல், மன உளைச்சல், பகை, கடன் தொந்தரவு என்று கலங்கடித்தார் ராகு பகவான்.

இப்போது உங்கள் ராசிக்கு ஐந்தாம் வீட்டில் அடியெடுத்து வைப்பதால், குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் நீங்கி, குதூகலம் பிறக்கும். கணவன் மனைவிக்கு இடையே இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும்.

ஆனாலும் புத்தி ஸ்தானமான 5ஆம் வீட்டில் ராகு அமர்வதால், சந்தேகக் கண்ணுடன் எல்லோரையும் பார்ப்பீர்கள். வீண் அலைச்சல், டென்ஷன், முன்கோபம் குறையும். குடும்ப வருமானத்தை உயர்த்த அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். மனைவி நெடுநாள்களாகக் கேட்டுக்கொண்டிருந்த தங்க ஆபரணம், ரத்தினங்களை வாங்கித் தருவீர்கள்.

பிள்ளைகளின் அடிமனதிலிருக்கும் ஆசைகளைக் கேட்டறிந்து, அவற்றைப் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளின் வருங்காலம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். ஆனால், பிள்ளைகளுடன் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படலாம். இயன்றவரையிலும் பிள்ளைகளிடம் கனிவுடன் நடந்துகொள்ளுங்கள். உங்களின் தனிப்பட்ட கருத்துகளை அவர்களிடம் திணிக்க வேண்டாம்.

இதுவரையிலும் உங்களை எதிர்த்து வந்தவர்கள், இனி அடங்குவார்கள். வலிய வந்து நட்புப் பாராட்டுவார்கள். சொந்தபந்தங்களின் அன்புத் தொல்லைகள் குறையும். என்றாலும் அவ்வப்போது பணம் கேட்டு நச்சரிப்பார்கள். நெடுநாளாகக் குல தெய்வக் கோயிலுக்குப் போகவேண்டும் எச்ன சொல்லிக் கொண்டுதானே இருந்தீர்கள். இனி, குடும்பத்துடன் சென்று வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள்.

கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மருத்துவரின் ஆலோசனைப்படி உணவுப் பழக்கத்தை அமைத்துக்கொள்ளவும்.

கன்னிப்பெண்களே! தள்ளிப்போன திருமணம் கூடி வரும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உயர்கல்வியில் வெற்றி உண்டு. மனம் மகிழும் சம்பவங்கள் நிகழும்.

வியாபாரத்தில், என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தீர்களே! இனி, அனுபவ அறிவால் சில மாற்றங்களைச் செய்வீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். கொஞ்சம் கனிவாகப் பேசி வசூலியுங்கள். வேலையாள்கள் பொறுப்பு உணர்ந்து நடந்துகொள்வார்கள். அவர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில், இதுவரையிலும் உயரதிகாரியுடன் இருந்து வந்த மோதல்போக்கு நீங்கும். அவர் உங்களுக்கு உதவியாகச் செயல்படுவார். நீங்களும் உங்களின் திறமை களை முழுமையாக வெளிப்படுத்திச் சாதிப்பீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக நடந்துகொள்வார்கள். நீங்கள், வெகுநாள்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வு இப்போது கைக்கு வரும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புது வேலை கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு நழுவிப்போன புதிய வாய்ப்புகள் தேடி வரும். கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதேபோல், வீண் வதந்திகளிலிருந்தும் விடுபடுவீர்கள். உங்களின் கற்பனைத்திறனுக்குப் பாராட்டுகள் குவியும். அதே நேரம் புகழின் காரணமாகக் கர்வம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.



**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்குப் பன்னிரண்டாம் வீட்டில் அமர்ந்து ஆடம்பரச் செலவுகளையும், வீண் அலைச்சலையும், கடன் பிரச்சினைகளையும் கொடுத்து உங்களைத் தூக்கமின்றித் தவிக்க வைத்த கேது பகவான், இப்போது உங்கள் ராசிக்கு இலாப வீடான பதினொன்றாம் வீட்டுக்கு வந்து அமர்கிறார். ஆகவே திடீர் யோகம் உண்டாகும். பணப் புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். வீட்டில் கெட்டிமேளச் சத்தம் கேட்கும். மூத்த சகோதரர் உதவுவார். பிரபலங்களைச் சரியாகப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள்.

பணப்பற்றாக்குறையால் கட்டட வேலை பாதியிலேயே நின்று போனதே, இனி வங்கியில் லோன் போட்டு வீட்டை முழுமையாகக் கட்டிமுடிப்பீர்கள். ஆழ்ந்த உறக்கம் வரும். வெளி வட்டாரத்தில் சாதாரணமாகப் பேசினாலே சண்டைக்கு வந்த நிலை மாறும். இனி உங்கள் பேச்சில் தெளிவு பிறக்கும்.


அடிக்கடி செலவுகள் வைத்த வாகனத்தை மாற்றிவிட்டுப் புதுரக வாகனத்தில் வலம் வருவீர்கள். வேற்று மொழிக்காரர்களால் பயன் அடைவீர்கள். வெகுநாள்களாகப் போக நினைத்த வெளிமாநிலப் புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வெளிநாட்டினரால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடுவீர்கள். மேலதிகாரி நேசக் கரம் நீட்டுவார். சக ஊழியர்களிடம் கொஞ்சம் இடைவெளி விட்டுப் பழகுவது நல்லது.

கணினித் துறையிலிருப்பவர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.

மொத்தத்தில் இந்தப் பெயர்ச்சி காலத்தில், ராகுவால் கொஞ்சம் மனக்குழப்பம் ஏற்பட்டாலும், கேதுவால் உங்கள் வாழ்வில் நிம்மதியும், பொருளாதார முன்னேற்றமும் உண்டாகும்.

அம்பாள் வழிபாடு அல்லல்களைப் போக்கும். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் அம்மனை வழிபடுவதால் சுபீட்சங்கள் பெருகும்.

(தொடரும்)



# 12 ராசியின் லக்கினமும் ஏற்படும் மரணமும்

**விருச்சிக லக்கினம்**

பெற்றோரிடம் பாசம் மிக்கவர். மனைவியிடம் அன்பு காதலுடையவர். இனிமையாகப் பேசும் ஆற்றலுடையவர். எடுத்த காரியத்தைத் திறமையுடன் முடிப்பவர். வலிமையான கால்கள், திரண்டுருண்ட தோள்கள், வேகமான நடை இவற்றையுடயவர். கேட்போர்க்கு மறுக்காது கொடுப்பவர். நன்றாக பேச வல்லவர். இவர் பேச்சுக்கு செல்லும் இடங்களில் எல்லாம் மதிப்பு இருக்கும். தம் உறவினர்களிடம் துவேஷம் உள்ளவர். காம இச்சை அதிகம் உள்ளவர். மனைவியிடத்தில் அதிக ஆசை உள்ளவர். சாஸ்திரப்படி நடப்பவர். சத்ருகளை ஜெயிப்பவர். வலிமையான உடலும், முரட்டுத்தனத்தை எடுத்துக்காட்டும் தோற்றம் உள்ளவர். எல்லாவற்றிற்கும் வாக்குவாதம் செய்பவர். குரூர சுபாவம் உள்ளவர். விரும்பாத பிறருடன் பகைமை பாராட்டுவார். எதிலும் அளவுக்கு மீறிய ஆசையுள்ளவர். வட்டி தொழில், பைனான்ஸ் செய்வதில் வல்லவர். 5ஆவது வயதில் காய்ச்சலாலும், 10, 12, 18ஆவது வயதில் நெருப்பாலும், 40ஆவது வயதில் வாதம், காய்ச்சலாலும் கண்டம் ஏற்படும். ஆணி மாதம் வளர்பிறை துவாதசி திதியில் விசாக நட்சத்திரத்தில் சனிக்கிழமை மாலை வேளையில் இறப்பர்.

**தனுசு லக்னம்**

இவர்கள் மூத்தவர்களுக்குப் பயப்படாதவரும் இளையவர்களுக்கு அஞ்சுபவர்களும் ஆவர். கல்வியாளர், பகைவர்களை வெல்பவர். இளம் வயதில் செல்வமுடையவர். எந்த காரியத்திலும் லாப நஷ்டம் பார்ப்பவர். திருமாலின் பொலிவுள்ளவர். வாசனைப் பொருள்களில் விருப்பம் உள்ளவர். படிப்பாளி. தம் தாய் தந்தையை காப்பவர். வாகன பாக்கியம் உண்டு. நல்ல கட்டான உடல் வாகும் முக்கோண முகமும், சிவந்த நிறமும் உள்ளவர். உதட்டில் குழிவிழுந்த அதிர்ஷ்ட அடையாளம் உண்டு. நிறைய ரோமம் உண்டு. தத்துவம், ஞானம் வேதாந்தம் முதலியவற்றில் விருப்பம் உண்டு. அரச உத்தியோகத்துக்கு வாய்ப்பு உண்டு. பாரம்பரியத்தில் பற்றுள்ளவர். ஆசிரியர், வழக்கறிஞர், ஆடிட்டர், பொருளாதார நிபுணர், நீதிபதி, புரோஹிதம், வங்கித்துறை, மடாதிபதி, மத தலைமை, கல்வி துறை, பதிப்பு துறை, போன்ற தொழில்கள் அமையலாம். 3, 10, 32, 40ஆவது வயதில் கண் நோயால் பாதிக்கப்படலாம். ஆனி மாதம் வளர்பிறை துவாதசி திதியில் விசாக நட்சத்திரத்தில் சனிகிழமை மாலை இயற்கை எய்தலாம்.

**மகர லக்னம்**

மகர லக்னத்தில் பிறந்தவர்கள் அழகை ஆராதிப்பவர்கள். மலர்களின் மேல் விருப்பமுள்ளவர்கள். சிவந்த நிறமுடையவர். மனைவி / கணவன் மேல் பிரியமுடையவர்கள். மறைவிடத்தில் மச்சமுள்ளவர். திரிலோக சஞ்சாரியாக ஊர் சுற்றுபவர். பலதுறை கல்வியும் காரியம் சாதிக்கும் வலிமையும் பெற்றவர்கள். திட புத்தியும் பல வழிகளில் உழைத்து சம்பாதிக்கும் திறனும் உள்ளவர். சுய நலம் மிக்க காரியவாதி. மனைவியிடம் அதிக அன்புள்ளவர். படிப்பில் மந்தமானவர். கஞ்சர், எளிதில் பிறரை நம்பாதீவர். சந்ததி விருதியுண்டு.

இளைத்த ஒல்லியான தேகம் உள்ளவர். தொங்கும் கன்னம், தொய்ந்த தோள்கள், வயதுக்கு அதிகமான தோற்றமும் உள்ளவர். பலன் கருதியே பிறருக்கு உதவுபவர், அரசு தரப்பு வேலைகள் உண்டு, மிகவும் சந்தேக புத்தி உள்ளவர். ஏதாவது ஆரோக்கிய குறைபாடு இருந்துகொண்டு இருக்கும். சனி ஜாதகத்தில் நன்கு அமைந்தால் தெளிவு, தியாக புத்தி இருக்கும். தீர்கதரிசியாகவும் இருப்பார். அரச வேலை, தொழிற்சாலை, எண்ணெய் வள வாரியம், விவசாயம் முதலிய தொழில் உண்டு. மூட்டு வலி, ருமாட்டிசம், கால் சம்பந்தமான நோய்கள் உண்டு. 3,4,5,7, 8,10,32,37ஆவது வயதுகளில் தண்ணீர், சுரம், விஷம் இவற்றால் தொல்லைகள் ஏற்படலாம். ஆவணி மாத தேய்பிறை ஞாயிறு உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய நாளில் உதய காலத்தில் இறப்பு ஏற்படலாம்.

(தொடரும்)

## மரண அறிவித்தல்

### திருமதி மண்டலேஸ்வரி கதிர்காமத்தம்பி



பிறப்பு 20.12.1940 இறப்பு 20.03.2019

விநாயகர் வீதி, அல்வாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மண்டலேஸ்வரி கதிர்காமத்தம்பி 20.03.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றகந்தையாதம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும், சிறீதரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி), கலைவாணி (கனடா), சிறீஸ்குமார்(அதிபர், யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலை), ரமேஷ்குமார் (பொறியியலாளர் - கொழும்பு), சிறீகோபிதரன் (ஆசிரியர் - மன்/அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்), அசோக்காந் (Quantity Surveyor) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசக்தி (ஆசிரியர் - யாழ்.சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்), இ.ரவிந்திரகோன் (கனடா), சாருலதா (ஆசிரியை - யாழ்.மத்திய கல்லூரி), சுமதி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்தியான் சிறிஜனனி, ஆதித்தியான், வைஷ்ணவன், வைஷாலினி, வைஷிகா, சாஹித்தியா, கஜன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற சின்னம்மா, கனகரத்தினம், காலஞ்சென்ற தருமலிங்கம், சகுந்தலாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் ஆத்தியடி பருத்தித்துறையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆத்தியடி,**
**பருத்தித்துறை.**

(ANE/760)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 717 2901, 077 327 6963**

## தவறிவிட்டது

21.03.2019 வியாழக்கிழமை
சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும்
இடையில் 5.00 - 6.30 மணியளவில்
I Phone 6 தவறிவிட்டது. இதனை
கண்டெடுத்தவர் கீழ் உள்ள
தொலைபேசி இலக்கத்திற்கு
தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)

(CS 24183) (14.17)

**077 252 2495**

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும்
சுப்பர்மார்க்கட்டுக்கு பின்வரும்
பணியாளர்கள் தேவை.

01. கணக்கு பதிவாளர்
(40 - 50 வயதுக்கு உட்பட்டவர்)
02. பொதி செய்தல் (பெண்கள்)
03. சிற்றுண்டி தயாரிப்பாளர் (பெண்கள்)
04. சுத்திகரிப்பாளர்கள் (ஆண்கள்)

(CS 9701)(14.17)

**077 447 9815**

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 26.11.1940
மறைவு 22.02.2019

கடந்த 22.02.2019 வெள்ளிக்கிழமை
இறைபதம் அடைந்த
எமது குடும்ப விளக்கு

அமரர்
### இரத்தினம் சுந்தரலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சூராவத்தை, சுன்னாகம்

மகன்: இராஜ்குமார்
மகள்: சறோஜா

## மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 12 . 1948
இறப்பு 20 . 03 . 2019

### பொன்னம்பலம் பரமலிங்கம்

**(முன்னாள் காசாளர் - வூட்லண்ஸ் உணவகம், கொழும்பு)**

யாழ்.புங்குடுதீவு 7 ஆம் வடடாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரமலிங்கம் 20.03.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், மார்க்கண்டு - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலநாயகியின் (கொழும்பு) அன்புக் கணவரும், துஷ்யந்தியின் (ஆசிரியை - கொ/புனித அந்தோனியார் கல்லூரி) அன்புத் தந்தையும், நிஷாந்தனின் (கனடா) அன்பு மாமனாரும், அகரன், அபியுக்தன் (கொ/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சபாரத்தினம் (நிர்வாக உத்தியோகத்தர்), தருமரத்தினம் (பிரபல வர்த்தகர்), குணபாலசிங்கம் (பிரபல வர்த்தகர்), கனகலிங்கம் (பிரபல வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லோகநாயகி (சுவிஸ்), சந்திரகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற தருமலிங்கம் (பிரபல வர்த்தகர்), சுந்தராம்பாள், சந்திராதேவி (கனடா).நாகம்மா, காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், விஸ்வலிங்கத்தின் (சுவிஸ்) அன்புச் சகலனும், பங்கையற்செல்வியின் (சுவிஸ்)அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 155/1, வாசலவீதி, கொழும்பு 13 என்னும் முகவரியில் உள்ள இவரது இல்லத்தில் எல்லோரினதும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**155/1, வாசல வீதி,**
**கொழும்பு - 13**

(CS/24186)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 913 2325, 011 233 0426**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 21.02.2019
வியாழக்கிழமை இறைபதம்
அடைந்த எமது
குடும்பத்தலைவர்



### அமரர் தம்பிராசா சிறீஸ்கந்தராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.03.2019) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நுணாவில் கல்வயல் வீதி,**
**சாவகச்சேரி.**

(CS 00574)(14.17)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 16 . 04 . 1953



விண்ணில் 21 . 02 . 2019

### அமரர் முருகேசு நடராஜா


நிழல்போல் இருந்தீர்கள் அப்பா – இன்று
நினைவாய் மாறினீர்கள் அப்பா
முதுமையிலே எம்மைச்சுமந்து தெய்வமாய்
இருந்தீர்கள் தாத்தா
எம்மைச் சுமக்க இனி எப்போ வருவீர்கள் தாத்தா
நடமாடும் வீட்டில் படமாகிப் போனீர்கள் தாத்தா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இருகரம்
ஏந்தி வேண்டி நிற்கின்றோம்

மீசாலை வடக்கு,
இராமாவில், கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகளின் அர்ப்பணம்

தோற்றம் 12 . 04 . 1950



மறைவு 03 . 04 . 2018

ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும்
இல.21, கற்குழியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட

## கதிரப்பிள்ளை இராசரத்தினம்

(A.K.R - லொறி உரிமையாளர்)



ஊருக்கெல்லாம் சிறந்த ஒரு உத்தம சீலனாகவும்
மனைவிக்கு சிறந்த மனச்சாட்சி கொண்டவராய்
நல்ல தந்தைக்குரிய தனிப்பெருமை மாறாது
கல்வியைப் பெற்றுத்தந்து கௌரவமிக்க பிள்ளையாக்கி
குடும்பத் தலைவனுமாய், பொறுப்பு மிக்கவராய்
உறவினர்க்கெல்லாம் உதவி புரிபவராக
குடும்பத்திற்குரிய குலப் பெருமையுடன்
அத்தனை கடமைகளையும் அணையவிட்டு
பரமனிடம் பதிவுபண்ணிப் பன்னிரண்டு மாதங்கள்
பறந்து போனதுவோ!!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (23.03.2019) சனிக்கிழமை இல.21, கற்குழி, வவுனியா அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிரியையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.21, கற்குழி,
வவுனியா.

[illegible]

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# நினைவேந்தல் நிகழ்வு



## சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

இடம்:- துர்க்காதேவி மணிமண்டபம், நல்லூர்
காலம்:- 24.03.2019, ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- காலை 9 மணிமுதல்

நிகழ்ச்சி நிரல்

- காலை 9.00– 9.20
  - மங்கல விளக்கேற்றல்
  - அக வணக்கம்
  - இறை வணக்கம்
- காலை 9.20 – 10.00
  - நினைவுரைகள்
- காலை 10.00 – 11.00
  - "பண்ணிசை மாலை"
- மு.ப. 11.00 – மதியம் 12.00
  - "சிவத்தமிழ் வித்தகம்" நூல் வெளியீடு
- மதியம் 12.00
  - நன்றியுரை
  - மதிய உபசாரம்

இதனைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
தங்கள் நல்வரவை நாடும்

"சிவஜோதி", பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
021 221 2226

# மரண அறிவித்தல்கள்

## பாக்கிய நேசர் ஜெகசுகன்

(யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர்- மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், ஆசிரியர் - அக்குரணை ஸாஹிரா தேசிய பாடசாலை)



வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநேசர் ஜெகசுகன் 20.03.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநேசர் (கமநலசேவை தலைவர் - கிளிநொச்சி) பகவதி (பிரதம தாதி உத்தியோகத்தர் - கிளிநொச்சி) தம்பதியரின் அன்பு மகனும், ஜெகந்தினி (ஆஸ்திரேலியா - முன்னாள் சைவ மங்கையர் கழகம் - கொழும்பு), சுகந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா, சாமுவேல் முத்துக்கந்தையா, மார்க்கிரட் பாக்கியம் ஆகியோரின் பேரனும், முருகதாஸின் (ஆஸ்திரேலியா) அன்பு மைத்துனரும், பராசக்தி புண்ணியமூர்த்தி (கனடா), பரமேஸ்வரி (கனடா), பத்மாவதி பாலசுந்தரமூர்த்தி, பரிமளம், காலஞ்சென்ற பாக்கிய ஜீவர் மற்றும் பாக்கியராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும், பரமகுருநாதன், பிறேமா (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள்- கனடா) காலஞ்சென்றவர்களான பாக்கியரஞ்சிதம், பாக்கியஜெயம் மற்றும் புஸ்பதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.

077 869 4060



## திருமதி மாணிக்கம் கந்தையா

தோற்றம் 06.10.1935 மறைவு 20.03.2019

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், 33, பேக்கரி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் கந்தையா 20.03.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி மாரிமுத்து மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், குணேஸ்வரி (திருகோணமலை), சியமளா (ஜேர்மனி), றோகினி (கனடா), சிறீரஞ்சினி (பிரான்ஸ்), பாஸ்கரன் (ஜேர்மனி), மாலினி (ஜேர்மனி), பாலினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசோதிராஜா (திருகோண மலை), லோகநாதன் (ஜேர்மனி), செல்வஞானம் (கனடா), சிறீகிரிதரன் (பிரான்ஸ்), சதீஸ்குமாரி (சசி - ஜேர்மனி), விபுலானந்தன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (வெள்ளை - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லக் ஷிக்கா, தர்ஷிக்கா, பிரசாந்தன், வினோத், யகீரன், அனோஜன், சோபிக்கா, நிரோஷிக்கா, செந்தூரன், செலின், சரன், பிறிஸ்ரிஜா, பிறிஸ்ரிஜன், விஜய், பிரியங்கா, நிவேதா, சரண்ஜீவ், நஸ்மிக்கா, நிசானிக்கா ஆகியோரின் பேர்த்தியும், சியோரா, சிசிக்கா, ஆரியன் ஆகியோரின் பூட்டியும், கந்தையா (திருகோணமலை), காலஞ்சென்றவர்களான செல்லையா, மாரிமுத்து, வள்ளி ஆச்சி, நாகமணி, அப்புகுட்டி, மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னுத்துரை, அப்புத்துரை, அன்னம், சரஸ்வதி, நவரெட்ணம், நடராசா, ஐயாத்துரை மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(CS/24195)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 05 . 12 . 1938

இறப்பு 22 . 03 . 2019

### வஸ்தியாம்பிள்ளை நிக்கலஸ் சபாரட்ணம்

யாழ்ப்பாணம் இல.80/3, பருத்தித்துறை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை நிக்கலஸ் சபாரட்ணம் 22.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - இராக்கினியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - கிளாறம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் றோஸ்மலரின் அன்புக் கணவரும் செல்வா(யாழ்ப்பாணம்), அன்ரனிற்றா(ஜெனி - இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை, யாழ்ப்பாணம்), ஜெபதாசன் அருமைநாயகம் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜித்(யா/இந்துக்கல்லூரி), அஜன்(யா/இந்துக்கல்லூரி), அஜிபா(யா/இந்து மகளிர் கல்லூரி), அனிஸ்ரன் (இத்தாலி), அனஸ்ரினா(இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேரனும் பிரகாசியம்மா காலஞ்சென்ற பசில் யோகரட்ணம் மற்றும் பிலோமினா அருள்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தோமஸ், திரேசம்மா, லோறன்ஸ், தேவசகாயம் மற்றும் கொன்ஸ்ரன்ரைன், ஞானசௌந்தரி(லண்டன்), அகிநேசம்(பிரான்ஸ்), இராசேந்திரம்(வவுனியா), அன்ரன், ஜெகநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை(24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு (O.L.R) எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையின் பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.80/3, பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (CS 24188)(14,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 085 6412**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

நிகழும் விளம்பி வருடம் 22.02.2019 இரவு சிவபதமடைந்த எமது குலவிளக்கு

### திருமதி பாரதி பாலச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.03.2019) சனிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். நாளை மறுதினம் (25.03.2019) திங்கட் கிழமை மதியபோசன நிகழ்வு **யாழ் - பருத்தித்துறை வீதி (முதலாம் கட்டை) சூரிய மஹால் மண்டபத்தில் நடைபெறும்.** அத்தருணம் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

பாடசாலை வீதி,
வியாபாரிமூலை, பருத்தித்துறை. (CS24193)(11,17)

**குடும்பத்தினர்.**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 . 10 . 1940

உதிர்வு 12 . 04 . 2009

அமரர்

### சின்னையா புலேந்திரன்

(ஓய்வுபெற்ற இ.போ.ச சாரதி)


அன்பினிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
பத்தாண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

"ரஜனிமஹால்"
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## கந்தையா செல்வராசா



தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா நேற்று(22.03.2019)வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியினரின் அன்புமருமகனும் தவயோகராணியின் பாசமிகு கணவரும் கிருபானந்தன் (பொறியியலாளர்), நாகராஜன் (பொறியியலாளர்),சதானந்தன்(பொறியியலாளர்),பாலச்சந்திரன்(பொறியியலாளர்), ஜெயானந்தன் (விரிவுரையாளர் தொழிநுட்பவியல்கல்லூரி - யாழ்ப்பாணம்), செல்வச்சந்திரன் (பொறியியலாளர்), செல்வரஞ்சன் (பொறியியலாளர்), அருட்குமரன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜொபிற்றாமேர்சி சசிரேகா, திலகவதனி, யாழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், காரைநகர்), சபிதா, தனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஞ்ஜனன், அகல்யன், அஞ்ஜயன், பிரவீன், சர்வீன், சாண்டில்யன், நிரஞ்சனா, ஆகித்யன், ஆரபி, அஞ்ஜிதன், அபினா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி, வடலியடைப்பு**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்குடும்பத்தினர்.**
**077 951 6245**

## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 11 . 1948

இறப்பு 21 . 03 . 2019

### திருமதி திகம்பரேஸ்வரி கோபாலகிருஸ்ணன்

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், சீனிவாசகம் வீதி, கொட்டடியினை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி திகம்பரேஸ்வரி கோபாலகிருஸ்ணன் நேற்றுமுன்தினம் (21.03.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகளும், கலாபூசணம் கோபாலகிருஸ்ணன் (J.P. தலைவர் - சப்த ஜீவக திவ்ய ஜீவன சங்க சமாசம், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும், தயாநிதி (லண்டன்), வாகினி (லண்டன் - முன்னாள் ஆசிரியை, யா/ நயினாதீவு மகாவித்தியாலம்), குணாஜினி (யாழ். மாவட்ட காணிப்பதிவாளர், காணிப்பதிவகம், மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், கிரிதாஸ் (லண்டன்), சிவநாதன் (லண்டன்), சதீஸ்குமார் (ஆசிரியர் - யா / சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் மாமியும், ஆருதி, ஹரிஷா, சுருதி, சின்மஜி, சுகப்ரதா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற துரைரத்தினம் மற்றும் கணேசரத்தினம், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, நவநீதரத்தினம் மற்றும் சடாச்சரமணி, விக்னேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, மங்களேஸ்வரி மற்றும் ஜெயலட்சுமி, பரிமளம், உமாதேவி, கனகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், குலஆனந்தன் மற்றும் செல்வரத்தினம், கங்கநாதன் ஆகியோரின் மைத்துனியும், சிவகடாச்சம், காலஞ்சென்ற சத்தியேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, கேதீஸ்வரன், சுந்தரேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் சிறிய தாயும்,கஜரூபன், ஜெகதீஸ்வரி, ஞானகாந், கஜநீதன், சஜாநந்தி, குஜாஜினி, துஷாந்தினி, சிஜானந்தன், டஜந்தன், மோஜனன், செந்தூரன், சியாமா, திபிகா, தர்சிகா, சாஜிகா ஆகியோரின் பாசமிகு பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**30/4, சீனிவாசகம் வீதி,**
**தர்மலிங்கம் அவெனியூ,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்** (cs 23659)

**021 222 1341**

## வேலைக்கு ஆள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு கணினியில் அனுபவமுள்ள பக்கவடிவமைப்பு, கிறாபிக் வேலைகள் செய்யக்கூடியவர்கள் தேவை.

**077 863 0268**

(CS 24184) (14.17)

## வேலையாள்கள் தேவை

அச்சகத்தில் பணியாற்றுவதற்கு கணினி சம்பந்தமான பூரண அறிவுள்ள பெண் ஊழியர் தேவை அத்துடன் புத்தகங்கள் கட்டுவதில் அனுபவமுள்ளவரும், பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம். திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் நேரில் சமூகம் தரவும்.

**இடம்**: மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்

**தொடர்பு - 077 392 0797**

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு வாகனத்தில் சென்று பொருட்கள் விநியோகிக்க கூடிய Delievery Boys தேவை. **077 385 1214, 077 392 3036**

## முகாமையாளர் தேவை

தென்மராட்சி கலாசார மண்டப பராமரிப்பு பணிக்கு முகாமையாளர் தேவை.

சம்பளம் விபரம் நேரில்.

**தொடர்பு - 077 316 0786**

## வேலையாள்கள் தேவை

நன்கு அனுபவமுள்ள பேக்கரி பாஸ் மற்றும் ஆட்டோசாரதிகள் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம்**

கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

16 அடி X 8 அடி சுருக்குக் கதவுகள் மூன்று விற்பனைக்குண்டு.

**077 225 0149**

(IN 9705)(14.17)

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பெற்றோல் செற் முன்பாக பலாலி வீதி முகப்பாகக் கொண்ட ஏறத்தாழ 1800 சதுர அடி பரப்பளவு உடைய 3 அறைகள் 2( Hall ) ஹோல், 3 குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. மாதாந்த வாடகை 50.000/- இற்கு மேல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**077 953 0496, 021 222 2478**

(CS24181)(11.17)

## Maruti Car விற்பனைக்கு

WP KW இலக்கம், Silver Colour, முதலாவது உரிமையாளர், 47650 km Milage மிகச்சிறந்த நிலையில். **077 046 6755, 077 424 2327**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் இரும்பகத்துக்கு வேலையாள்கள் தேவை.

**077 225 0149**

(IN/9704) (11.17)

## E,S Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472

esprintersjaffna@gmail.com

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வசதியான வீடு வாடகைக்கு தேவை. **075 204 0832**

## Vacancies

01) Civil Engineer
02) Quantity Surveyor
- NVQ Level 5 or Equivalent with minimum three years experience.

03) Technical Officer (Two years Experience with Preparing BOQ & Bills)


Email: bestbuilders9@hotmail.com

Contact: 077 724 5399

(CS24177)(11.17)

# மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்

**"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தப்பை கல், சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."**



மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கும் உயர்தர தீர்வினை வழங்கி வருகின்றது.



**இலகு தவணை கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்**

மாதம் 3642/=லிருந்து

(நிபந்தனைக்கு உட்பட்டது)

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna.

HOTLINE: 075 331 3310

Tel: 021 222 6888

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**விசேட விலைக்கழிவு**

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி







### புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புறொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புறொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |

### இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : இன்று முதல் 23.03.2019 - 14.04.2019 வரை**

## வடக்கில்...

விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, புத்தளம், குருநாகல், அம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் வெப்பமான காலநிலை நிலவுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ஒ.5)

## வெளிநாட்டு...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசபிதா டி.எஸ். சேனநாயக்கவின் கொள்கை வழியில்தான் நாம் பயணிக்கின்றோம் என்பது நேற்றுகூட (நேற்றுமுன்தினம்) உறுதிபடுத்தப்பட்டது.

வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறை அவசியம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் ஜெனிவாத் தொடரில் கோரிக்கை விடுத்திருந்தார். இலங்கை ஜனநாயக நாடு. சுயாதீன நீதிமன்ற கட்டமைப்பு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டி மேற்படி கோரிக்கையை அயலுறவுத்துறை அமைச்சர் நிராகரித்தார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் செயலகமொன்றை இலங்கையில் அமைக்கவேண்டியதில்லை. மனித உரிமை ஆணையாளர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் எமது நாட்டுக்கு வரலாம் என்றும் எமது நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். இதன்மூலம் இலங்கையின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டது.

படையினரைப் பன்னாட்டு போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல இடமளிக்கப்படாது. எவராவது தவறிழைத்திருக்கும் பட்சத்தில் உள்நாட்டில் வழக்கு தொடுத்து நடவடிக்கை எடுக்கலாம். எமது அரசு படையினரைத் தண்டிக்கவில்லை. மாறாக ஐ.நா. அமைதிப்படைக்கே ஆள்களை அனுப்பியுள்ளோம் - என்றார். (ஒ.5)

## இந்து...

பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் மீண்டும் இந்து ஆலய சிலை உடைக்கப்பட்டமை பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அம்மன் ஆலயத்தின் சிலையே உடைக்கப்பட்டு வீதியில் வீசப்பட்டுள்ளது.

சிவராத்திரிக்கு முதல் நாள், மன்னார் திருகேதீச்சர ஆலயத்தின் அலங்கார நுழைவாயில் கிறிஸ்தவ மக்களால் உடைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் மன்னாரில் மதப் பதற்றத்தை உருவாக்கியிருந்தது. இது தொடர்பாக நீதிமன்றில் வழக்கும் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அம்மன் ஆலயத்திலிருந்த சிலை அடித்து உடைக்கப்பட்டு வீதியில் போடப்பட்டுள்ளது. மன்னாரிலுள்ள இந்து மக்களை இந்தச் சம்பவம் புண்படுத்தியுள்ளது. யாரால் உடைக்கப்பட்டது என்பது இதுவரை தெரியவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

(ஒ.5.213)

**மனேச்சர் தேவை**
**விருந்தினர் விடுதி**

யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதிக்கு மனேச்சர் உடனடியாகத் தேவை

**முன் அனுபவம் உள்ளவர்கள்**

- பென்சனியர்கள் யாழ்ப்பாண பட்டின சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது
- ரெலிபோனில் தொடர்புகொண்டு நேரடியாகச் சந்தித்துப் பேசுமாறு கேட்கப்படுகின்றீர்கள்

**076 279 2278**

(cs.24080) (13.17)

## செயற்கை...

டுள்ளதையடுத்து எதிர்வரும் தினங்களிலும் காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாகலை நீர்த்தேக்க பகுதிகளில் வான்பரப்பில் செயற்கை மழையை பொழிய வைப்பதற்காக இரசாயணப் பதார்த்தம் தூவுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ஒ.5)

## தமிழர்கள்...

லாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். மகிந்த தரப்பின் சார்பில் களமிறங்கும் எவரும் 50 சதவீதத்துக்கு மேல் பெற்றுக் கொள்ள முடியாது.

மகிந்த அணியினர் கோத்தபாயவை களமிறக்கினால் தோற்பது உறுதி. தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

மகிந்த அரசு தனது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளைகளை கேள்விக்குறியாக்கியது. மகிந்த அணி மீது தமிழ் மக்கள் முற்றாக நம்பிக்கை இழந்துள்ளனர் என்றார். (ஒ.5.61)

## மன்னார்...

லின் பின்னர் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா, களனி பல்கலைக்கழக பேராசிரியர் ராம சோமதேவ, காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ், காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.நிரஞ்சன், மன்னார் தடயவியல் பொலிஸார், புதைகுழி அகழ்வுக்குப் பொறுப்பான சட்டமருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச, குருநாகல் மற்றும் புத்தளம் சட்ட மருத்துவ அதிகாரிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

புதைகுழியைப் பாதுகாத்தல், பொலிஸ் பாதுகாப்பு வழங்கல், மீட்கப்பட்ட மனித எச்சங்களை உரிய முறையில் பாதுகாத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

புதைகுழி அகழ்வின்போது மீட்கப்பட்ட தடயப் பொருள்கள் தொடர்பான துறைசார்ந்த பெறுபேற்று அறிக்கைகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் சம்மந்தப்பட்ட தரப்புக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தடயப் பொருள்களை ஆய்வுக்காக பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் செல்வதற்கு நீதிமன்றின் அனுமதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளின் அடிப்படையில் எதிர்கால நகர்வுகள் தீர்மானிக்கப்படவுள்ளன.

**முடிவு செய்யமுடியாது**

மன்னார் புதைகுழி தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்ததாவது: தற்போதைய கார்பன் பரிசோதனை அறிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டிய தேவை இல்லை. மேலதிகமான ஆய்வுகளையும் செய்ய முடியும்.

மன்னார் மனித புதைகுழியின் மனித எலும்புக்கூடுகளின் கார்பன் பரிசோதனை அறிக்கை அனைத்து தரப்பினருக்கும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது. மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் கார்பன் பரிசோதனைக்கு கொண்டு சென்றுள்ள விதம் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. தற்போதைய கார்பன் பரிசோதனை அறிக்கையினை மட்டும் வைத்து காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டிய தேவை இல்லை. மேலதிகமான ஆய்வுகளையும் செய்ய முடியும். மண் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட தடயப்பொருள்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை வெளியான பின்னர் அனைத்து அமைப்புக்களும் இணைந்து பொருத்தமான முடிவுக்கு வர முடியும் என்றார். (ஒ.5.56.60)

## போராட்டக்காரர்கள்...

புத்தளம், மார்ச் 23

அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு கோரி, புத்தளத்தில் கறுப்புக் கொடி போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. பொலிஸாரின் தடையை மீறிச் செல்ல முற்பட்டபோது, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டது. பொலிஸார் தடியடி நடத்தினர். புத்தளம் மாவட்டத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கொழும்பு குப்பைகளை புத்தளத்தில் கொட்டும் அரசின் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் எனக் கோரி புத்தளத்தில் நீண்ட காலமாக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் அரச தலைவரை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு சர்வமத குழு மற்றும் க்ளீன் புத்தளம் அமைப்பினருக்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்குமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அந்த கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதை கண்டித்தும், புத்தளத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்திப்பதற்கு சர்வமத குழு உள்ளிட்டோருக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்குமாறும் கோரியே இந்த கறுப்புக் கொடி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில், நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், குப்பைக்கு எதிரான பல வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியவாறு, குப்பைக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

'ஸ்மார்ட் சிறிலங்கா வேலைத்திட்டத்தை புத்தளம் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைப்பதற்காக அரச தலைவர் வருகை தரவிருந்த நிலையில், பிரதேச செயலகத்தை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்ட போது, பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், அங்கு பதற்ற நிலை காணப்பட்டது. சிறப்பு அதிரடிப் படை, கலகம் தடுக்கும் பொலிஸாரும், நீர்த்தாரை பீச்சும் கவச வாகனமும் தயார் நிலையில் இருந்தன. புத்தளம் நகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

புத்தளம் பொலிஸார், இந்தப் போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக, புத்தளம் நீதிமன்றில் பெற்றுக்கொண்ட தடையுத்தரவை காண்பித்தனர். போராட்டம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்துக்குச் செல்லவதை பொலிஸார் தடுத்து நிறுத்திய போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்று புத்தளம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக திறந்து வைக்கப்படவிருந்த விளையாட்டு மைதானம் வரை நடந்து சென்றனர்.

புத்தளம் நகர விளையாட்டு மைதானத்துக்கு அருகில் ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கும் குப்பைக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியவாறு, கோசங்களையும் எழுப்பிக் கொண்டு கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கும் அமைதியின்மை ஏற்பட்டது. விளையாட்டு மைதானத்தை திறந்து வைப்பதற்காக அரச தலைவர் கலந்துகொள்ள இருந்த போதிலும் அங்கு ஏற்பட்ட அமைதியின்மையால், விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ் உள்ளிட்டோர் குறித்த விளையாட்டு மைதானத்தை திறந்துவைத்தனர்.

இதன்போது, குப்பை பிரச்சினை தொடர்பில் அரச தலைவருடன் கலந்துரையாடுவதற்காக சமயத் தலைவர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் அடங்கிய குழுவொன்றுக்கு சக்தி விளையாட்டு மைதானத்தில் வைத்து சந்திப்பதற்காக அனுமதி பெற்றுத் தருவதாக அரச தலைவர் செயலக அதிகாரியொருவர் வாக்குறுதி வழங்கிய போதிலும் இறுதி நேரத்தில் அந்த சந்திப்பு இடம்பெறவில்லை.

இதேவேளை, நாட்டுக்காக ஒன்றினைவோம் புத்தளம் மாவட்டத்துக்கான செயற்திட்டதின் பிரதான நிகழ்வு புத்தளம் சக்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டுள்ளார் என்பதை அறிந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், கறுப்புக் கொடிகளை ஏந்திக்கொண்டு புத்தளம் பேருந்து நிலையத்திலிருந்து சக்தி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக செல்ல முற்பட்டனர்.

சக்தி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி பலத்த பொலிஸ், சிறப்பு அதிரடிப்படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த மைதானத்துக்குச் செல்லும் சேர்விஸ் வீதியிலும் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

சக்தி விளையாட்டு மைதானத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்ட போது, அவர்களை அங்கு செல்ல விடாது, பொலிஸாரும், கலகம் தடுக்கும் பொலிஸாரும் தடுத்து நிறுத்தினர். அங்கும் அமைதியின்மை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள் மீது, பொலிஸார் தடியடி பிரயோகம் மேற்கொண்டனர். பலர் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இரண்டு இளைஞர்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(ஒ.5.22)

**தெய்வத்தின் திருப்பாதத்தில்**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

**ஆசீர்வாத பெருவிழா!**

**இயேசு ஜீவிக்கின்றார் சர்வதேச ஊழியத்தின் வெற்றிகரமான**
**41 வது சுவிசேஷ மாநாடு**

**மார்ச் 29, 30, 31**
**மாலை 05.30**

**மத்திய கல்லூரி மைதானம்**
**கிளிநொச்சி**

**பிரியமானவர்களே:**

நோய், கண்ணீர், வேதனை, பிசசின்பிடி, சூனியம், மந்திரீகக்கட்டுக்கள், பரம்பரை சாபங்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று மெய்யான சந்தோஷம், சமாதானம், நிம்மதியுள்ள வாழ்க்கை பெற இது ஓர் அரிய சந்தர்ப்பம்.... இன்று மனிதன் நிலையற்ற வாழ்விலே, உலகை செல்வம், உயர்நிலையை அடைய, இரவு பகலாக பிரயாசப்பட்டு, பாடுகளினால் மூடப்பட்டு, நிம்மதியை, சுகத்தை இழந்து, சகலவற்றிற்கும் மேலாக, தன் ஆத்துமாவை இழந்து காணப்படுகின்றான்.... இதிலிருந்து விடுதலை, மெய்யான சந்தோஷம், சமாதானம், ஆசீர்வாதமான வாழ்வை தர, சகல இன, மத, பாஷை இனங்களுக்கும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மறுரூபமாய் மனிதனை தேடிவந்தார். பாவ, சாபத்திலிருந்து விடுதலைபெற்று பரலோக வாழ்வை அடைய பூமிக்கு கொடுக்கப்பட்ட இரட்சகராகிய இயேசுவின் நாமத்தினால், தெய்வத்தின் திருப்பாதத்தில் குடும்ப சகிதம் கலந்து, நன்மைகளையும் ஆசிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**தெய்வீக சுகத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள**
**வாருங்கள் உங்களுக்காக பிரார்த்தனை செய்பவர்கள்**

**கலாநிதி. M.R இராஜேந்திரம் கலாநிதி. Dr.C.V இராஜேந்திரம்**

**41 வது அகில இலங்கை வேதாகம கருத்தரங்கு**

மாதம் 25 ம் திகதி முதல் 30 ம் திகதிவரை தினமும் காலை 9.00 மணிமுதல் 2.00 மணிவரை

இடம் – கூட்டுறவு சங்கம் மண்டபம், கிளிநொச்சி

பிரவேசம் இலவசம்

மேலதிக தொடர்புகளுக்கு–
இயேசு ஜீவிக்கின்றார் 401, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு– 15 T.P 011- 2522608

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சும்மா மிரட்டுவதில் பயனில்லை!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்தபுதிதில்தான் ஏற்றுக்கொண்ட பரிந்துரையை நான்கு ஆண்டுகள் கழித்து இப்போது நிராகரித்திருக்கிறது கொழும்பு அரசு. இறுதிப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்கள்மற்றும்மனிதகுலத்துக்குஎதிரானகுற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்கள் உள்ளடங்கலாக ஒரு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்பதே அந்தப் பரிந்துரை. இந்தப்பரிந்துரைமுன்வைக்கப்பட்டதீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி அதனை அப்படியே ஏற்றுக்கொண்டிருந்தது கொழும்பு. ஆனால், இப்போது அதனை நிறைவேற்ற முடியாது என்று மறுத்திருக்கின்றது.

அரசின் இந்த நிலைப்பாட்டைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏப்ரகாம் சுமந்திரன். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது ஆட்சியாளர்களின் இந்த முடிவுக்காக அவர்களைக் கடுமையாக விமர்சித்தார். அத்தோடு, இலங்கை ஆட்சியாளர்களின் முடிவு இதுதான் என்றிருந்தால், இந்த விவகாரத்தைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கொழும்பு அரசுக்கும் அதன் ஆட்சியாளர்களுக்கும் இதுபோன்ற பல எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. “போராட்டம் வெடிக்கும்”என்கிறஎச்சரிக்கைஅதில்மிகமுக்கியமானது. இருந்தாலும் அத்தகைய போராட்டங்கள் எவையும் இதுவரையில் நடந்ததில்லை. அதேநேரத்தில் கொழும்பின் அத்துமீறல்கள், வாக்குறுதி மீறல்கள் எல்லாவற்றையும் “எமக்கு வேறு வழியில்லை” என்கிற அடிப்படையிலும் “ஒன்றுமே நடக்காமல் இருப்பதைவிட ஏதோ நடப்பது பரவாயில்லை”என்கிறஅடிப்படையிலும்கூட்டமைப்புக் கடந்து சென்றதேநடந்திருக்கிறது. இது கொழும்பின் ஆட்சியாளர்களுக்கும் நன்கு தெரியும்.

இதனால், அவர்கள்கூட்டமைப்பின்அழுத்தங்களையோ தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளையோ தூக்கி எறிவதற்குத் தயங்கியதில்லை. இப்போதும் அதனையேதான்செய்திருக்கின்றார்கள். புதிய அரசமைப்பாக இருக்கட்டும், ஐ.நா. மனிதஉரிமைகள்தீர்மானமாக இருக்கட்டும்காணிவிடுவிப்பாகஇருக்கட்டும், அரசியல் கைதிகளின் விடுவிப்பாக இருக்கட்டும், காணாமற்போனோர் தொடர்பானவிசாரணைகளாக இருக்கட்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக இருக்கட்டும் அனைத்திலும் கொழும்பின் அணுகுமுறை தமிழர்களைச் சீற்றங்கொள்ள வைக்கும் வகையிலான புறக்கணிப்பாகவே அமைந்திருக்கின்றது.

அப்படியிருந்தும் அந்த அரசுக்கு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புத்தான் முண்டுகொடுத்து நின்றுகொண்டிருக்கின்றது. இத்தகைய அரசைக் கண்டித்தும், மிரட்டியும் அறிக்கைவிடுவதால் பயன்ஏதும்கிட்டப்போவதில்லை. இராஜதந்திரம்என்கிற ரீதியில் கூட்டமைப்புத் தலைவர்கள் விடுக்கக்கூடிய போராட்ட மிரட்டல்களுக்கும் கொழும்பு அஞ்சிப் பணியப்போவதில்லை என்பது உறுதி.

எனவே வெறுமனே மிரட்டல்களை மட்டும் விடுத்துக் கொண்டிராமல் உருப்படியான எதிர் நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கவேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

சேரலாதன்

# தப்பிக்க முடியாத நெருக்கடிக்குள் இலங்கை



ஜெ அழுத்தங்கள் அதிகரித்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ள கருத்துக்கள் இலங்கையை மென் மேலும் சங்கடத்துக்குள் ஆழ்த்திவிட்டன. பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இலங்கை மந்தகதியில் செயற்படுவதாக அவர் கடுமையாகச் சாடியுள்ளார். ஆனால் மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்களை இலங்கையின் சார்பில் மறுக்கப்பட்டமை அந்த நாட்டின் உண்மையான நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துத் காட்டிவிட்டது.

**மாறுபட்ட கருத்துகள்**

இறுதிப் போரின்போது போர்க்குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லையெனவும் இந்தக் குற்றங்களை விசாரிக்கவென பன்னாட்டு நீதிபதிகளை இங்கு அனுமதிக்க வேண்டிய தேவை எழவில்லையெனவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜெனீவாவில் வைத்துத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். ஆனால் இலங்கையின் கோரிக்கை ஏற்கப்படுமா? என்பதை இப்போதைக்கு நிச்சயமாகக் கூற முடியவில்லை.



இதேவேளை இறுதிப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக உள்நாட்டில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிப்பதன் ஊடாக பன்னாட்டுவிசாரணைகளிலிருந்த தப்பிக்க முடியுமென இறுதிப்போர் இடம்பெற்றபோது இராணுவத் தளபதியாக இருந்தவரும் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதை ஒப்புக்கொண்டவருமான சரத் பொன்சேகா அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இவரது கருத்து ஜெனிவாவில் வைத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்துக்க நேர்மாறாகவுள்ளது. ஏற்கனவே போர்க்குற்றங்கள் இடம்பெற்றதை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாரும் உறுதி செய்தமையும் சுட்டிக்காட்ட த்தக்கது. பன்னாடுகள் இந்தக் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**பன்னாடுகள் விசனம்**

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையில் தீர்வு எதையும் பெற்றுக் கொடுக்காமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதேவேளை ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அசமந்தமாகவும் அக்கறையின்றியும் இருப்பது குறித்து கனடா கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இதேவேளை மனித உரிமைகள் இலங்கையில் பாதுகாக்கப்படல் வேண்டும் எனவும் வன்முறைகளுக்கு எதிராக அந்த நாடு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் டென்மார்க் நாடும் தனது மக்களுக்கு இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதேவேளை இறுதிப் போரின்போது சகல வகையில் இலங்கைக்கு உதவிய பாகிஸ்தான் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குவது அவசியமென மட்டுமே தெரிவித்தது. போருக்குப் பின்னரான செயற்பாடு குறித்த அந்த நாடு இலங்கையைப் பாராட்டவும் தவறவில்லை. இலங்கையின் மிக நெருங்கிய நண்பன் என்ற வகையில் பாகிஸ்தானின் கருத்து எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான்.

**புதிய தீர்மானம்**

இந்த நிலையில் ஐ.நாவில் பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் இலங்கை குறித்து புதிய தீர்மானமொன்று நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. இரண்டுவருடகாலத்துக்குள்இந்தத்தீர்மானத்தில் குறிக்கப்பட்டவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு இலங்கையின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. அதை ஏற்பதாகக் கூறிய இலங்கை அதற்கு இணை அனுசரணையும் வழங்கியிருந்தது. இதனால் பொறுப்புக் கூறுவதிலிருந்து இலங்கை இனிமேலும் ஒதுங்கியிருக்க முடியாது. அதேவேளை ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை அதை நிறைவேற்றுவதற்காகவும் வாக்குறுதி வழங்கியமை முக்கியத்துவம் பெறுகின்றது.

**அஞ்சுவது ஏன்?**

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இடம்பெறாதிருந்தால் எந்த விதமான விசாரணைகளுக்கும் அஞ்ச வேண்டிய அவசியமே எழாது. பன்னாட்டு நீதிப் பொறிமுறையின் கீழ் தன்னையொரு நிரபராதியென நிரூபிப்பதற்கு இலங்கை தயங்க வேண்டியதுமில்லை. ஆனால் மனித உரிமைகள்கள் சபை என்றாலே இலங்கை வெடவெடத்துப்போய் நிற்பதையே காண முடிகின்றது. குற்றம் புரியாதவர்கள் எந்தவொரு ஆணைக்குழுவுக்கும் அஞ்சவேண்டியதில்லை. முன்னைய அரச தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாகக் கடும் அச்சம் கொண்டுள்ளதை அவரது அறிக்கைகள் வாயிலாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. இறுதிப் போர் இடம்பெற்றபோது அரச தலைவர் பதவியை அவரே வகித்ததால் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறும்போது தமக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என அவர் அச்சமடைந்திருக்கலாம். இந்தியா கூட ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கையைக் காப்பாற்றும் விதமாக நடந்து கொண்டமை கண்டிக்கத்தக்கது. இறுதிப்போரில் இந்தியாவும் முக்கிய பங்கை வகித்ததால் போர்க் குற்றங்களில் தாமும் மாட்டப்படக்கூடுமென்ற அச்சவுணர்வு இந்தியாவிடம் நிறையவே உள்ளது.

எவர் எதைக் கூறினாலும் ஐ.நாவையும் பன்னாட்டுச் சமூகத்தையும் இலங்கையால் இனியும் ஏமாற்ற முடியாது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இலங்கை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதே யதார்த்தமாகும்.

## குப்பையால் வரும் தொல்லை மோசம்

# வல்வெட்டித்துறை நகரசபையை எதிர்த்துப் போராட மக்கள் முடிவு

வல்வெட்டித்துறை, மார்ச் 23

**வ**ல்வெட்டித்துறை நகரசபைக்கு எதிராகப் போராடுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என்று, தொண்டைமானாறு மக்கள் தெரிவித்தனர். தொண்டைமானாறு கரும்பாவெளியில் வல்வெட்டித்துறை நகரசபையினர் குப்பை கொட்டுகின்றனர். அதனால் வரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் போராடும் முடிவுக்குத் தள்ளப்பட்டோம் என்று அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.


எரியூட்டப்பட்ட பிளாஸ்ரிக் கழிவு

அங்கு பல மாதங்களாகக் குப்பை கொட்டப்படுகின்றது. அவை தீவைக்கப்பட்டுளியூட்டப்படுவதால் குடியிருப்புகளுக்குள் புகை சூழ்ந்து சிரமங்களை ஏற்படுத்துகிறது.
அங்கிருந்து குப்பைகளை அகற்றுமாறு கோரி மக்கள் வல்வெட்டித்துறை நகரசபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சுற்றுச் சூழலுடன் தொடர்புபட்ட திணைக்களங்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

### மாற்று ஏற்பாடு

மக்களுடைய கோரிக்கைக்கு செவிசாய்த்த அதிகாரிகள், வல்வெட்டித்துறை முள்ளிப் பகுதியில் திண்மக்கழிவகற்றல் நிலையம் அமைக்கப்படவுள்ளது. பின்னர் குப்பைகள் இங்கிருந்து அகற்றப்படும் என்று உத்தரவாதம் வழங்கியிருந்தனர். குப்பை கொட்டுவதற்கு ஏற்ற இடவசதிகள் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இல்லாததால் அங்கு குப்பைகள் கொட்டப்படுகின்ற என்று நகரசபையினர் தெரிவித்திருந்தனர்.
குப்பை கொட்டுங்கள் ஆனால் எரியூட்டாதீர்கள் என்ற கோரிக்கையை மக்கள் முன்வைத்திருந்தனர்.

### தொடர்கிறது தீ வைப்பு

மக்களுடைய வேண்டுகோளை மீறி தீ வைக்கப்படுவது தொடர்கின்றது. நகர சபையோ தாங்கள் தீ வைக்கவில்லை என்று கூறுகின்றது. குப்பை எரிகின்றபோது அணைக்க நகர சபையே வரும். இந்த நிலை தொடர்கிறது. பிளாஸ்ரிக் கழிவுகள், பொலித்தீன் கழிவுகள் அனைத்தும் எரிக்கின்றன.

### மக்கள் கடும் விசனம்

தீயால் எழும் புகை காற்றின் திசைகளுக்கு ஏற்றவாறு குடியிருப்புக்களுக்குள் செல்கின்றது. கடுமையான துர்நாற்றம் வீசுகிறது. மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.
இலையான்கள் தொல்லை, சுகாதாரச் சீர்கேடு, சிறுவர்களுக்கு நோய்தொற்றும் அபாயம் என்று மக்கள் குறைகளை அடுக்கிக் கொண்டே செல்கின்றனர். நகரசபையினரே தீவைத்து விட்டு எமக்கு மறுப்புக் கூறுகின்றனர்.

### மூலிகைகள் நாசம்

தீ அந்தப் பகுதியில் உள்ள 50க்கும் மேற்பட்ட வகையான மூலிகைச்செடிகள் அழிந்துள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர் புஸ்பரட்ணம் உட்பட்ட ஆய்வாளர்களால் மேற்கொண்ட ஆய்வுகளின்போது தெரிவிக்கப்பட்டது.


நன்னீர் ஏரியில் கலக்கும் குப்பைகள்


கருகிய மூலிகைச் செடிகள்


எரிந்து முடிந்த குப்பை


குப்பையில் இருந்து எழும் புகை

### நன்னீர் ஏரியில் குப்பை

குப்பைகளை நாய்கள், காகங்கள் இழுத்துச் சென்று நன்னீர் ஏரிகளில் விடுகின்றன. பொலித்தீன் பைகள் காற்றில் பறந்து நன்னீர் ஏரியில் விழுகின்றன. நன்னீர் ஏரி மாசுபடுகிறது. நிலத்தடி நீரைப் பாதுகாக்க நீரைச் சேமிக்க அமைக்கப்பட்ட நன்னீர் ஏரி தற்போது மாசடைந்துள்ளது.
வெளிநாட்டுப் பறைவகள் இந்த நன்னீர் ஏரிக்கு விரும்பி வருகின்றன. இந்த நீரை அருந்தி அவை இறக்கும் நிலை காணப்படுகிறது.

### போராட முடிவு

இந்த நிலையிலேயே சலிப்படைந்த மக்கள் நகரசபையை எதிர்த்துப் போராட முடிவு செய்துள்ளனர். குப்பைகளை அங்கிருந்து அகற்றும் வகையில் போராட்டம் அமையவுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். நகரசபையின் சிறப்பு அமர்வு ஒன்றின் போது குறித்த பகுதியில் பாதுகாப்பு அலுவலர் ஒருவரைக் கடமையில் அமர்த்தி குப்பை கொட்டும் முறைகளைக் கண்காணிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் நடைறைக்கு வரவில்லை.

### தவிசாளர் பதில்

குப்பைகளைத் தரம் பிரித்தே எடுக்கின்றோம். நகரசபைக்குட்பட்ட குப்பைகளை 20 லோட், 30 லோட் என்று வெளியிடங்களுக்கு அனுப்புகிறோம். கடந்த ஓரிரு மாதங்களாகவே இவ்வாறு அதிகமாக எரியூட்டப்படுகிறது. நகர சபை தீவைக்கவில்லை. மக்களுடைய குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளமுடியாது. அந்தப் பகுதியைக் கண்காணிக்கின்றோம். நாளை(இன்று) தொடக்கம் காவலாளி ஒருவர் அங்கு அமர்த்தப்பட்டு குப்பைகளைக் கண்காணிப்பார் என்று நகரசபையின் தவிசாளர் கோ. கருனானந்தராசா தெரிவித்தார்.

(து-21.26)

---

989 மில். டொலர் கடன்

# சீனா - இலங்கை உடன்படிக்கை

கொழும்பு, மார்ச் 23

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்துக்காக, 989 மில்லியன் டொலர் இலகு கடனை வழங்கும் உடன்பாட்டில் சீனாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.
சீனாவின் எக்சிம் வங்கியின் மூலம், இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது.
நிதி அமைச்சில் நேற்று நடந்த நிகழ்வில், நிதி அமைச்சின் செயலர் சமரதுங்கவும், சீன எக்சிம் வங்கி சார்பில், இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சியுவானும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.
மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதற்கட்டமான, கடவத்த தொடக்கம் மீரிகம வரையான பகுதியில் பணிகளை மேற்கொள்வதற்கு, 1.164 பில்லியன் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த செலவில் 85 வீத தொகைக்கான கடனை சீன எக்சிம் வங்கி வழங்கவுள்ளது.

(ஒ.5)

# இலங்கையில் இந்தியாவின் முதலீடுகளை எதிர்க்கோம்

## சீனா கூறுகிறது

கொழும்பு, மார்ச் 23

அம்பாந்தோட்டையில் இந்தியா முதலீடுகளைச் செய்வதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று சீன அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்துள்ளார்.
பீஜிங்கில் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
'அம்பாந்தோட்டைக்கு அருகே இந்திய நிறுவனம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்க 3.85 பில்லியன் டொலரை செலவிடவுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம், பாதை மற்றும் அணைத் திட்டத்தின் ஒரு முக்கியமான ஒத்துழைப்புத் திட்டமாகும். இந்த நிலையில், இந்தியாவின் முதலீடு சீனாவின் முதலீடுகளுக்குச் சவாலாக இருக்குமா? இந்த நேரத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஒரு மூலோபாய போட்டி இருக்கிறதா?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.
அதற்கு சீன அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் பதிலளிக்கையில், நீங்கள் குறிப்பிட்ட தகவலைப் பற்றி நான் இன்னமும் அறியவில்லை. அதுபற்றி ஆராய வேண்டும். ஆனாலும், சீனாவும் இலங்கையும் பல்வேறு துறைகளில் ஆழமான, விரிவான ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன. அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் ஒரு நல்ல விடயம்.
இருதரப்புக்கும் பயனளிக்கும் இந்த திட்டத்தின் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துக்கும், சமூக அபிவிருத்திக்கும் சீனா உதவியுள்ளது. சீனாவின் உதவியை இலங்கை மதித்துப் பாராட்டுகிறது.
அதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, பரஸ்பர ஒத்துழைப்பை அல்லது, இலங்கைக்கும் ஏனைய தரப்புகளுக்கும் இடையிலான அத்தகைய ஒத்துழைப்பை சீனா வெளிப்படையாக அணுகுகிறது.
இலங்கையின் அபிவிருத்திக்கு, இந்தியாவுடனும் ஏனைய தரப்புகளுடனும் இணைந்து செயற்பட சீனா தயாராக இருக்கிறது. அயலுறவுத்துறை விவகாரங்களில், நீங்கள் கற்பனை செய்வதை விட சீனா இன்னும் பரந்த மனப்பான்மையைக் கொண்டுள்ளது, என்று தெரிவித்தார்.

(ஒ.5)

## வேலணை பிரதேச சபை எல்லைக்குள்

# பிளாஸ்ரிக்குக் பதிலாக பனை சார் உற்பத்திகள்

### சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

வேலணை பிரதேச சபை எல்லைக்குள் பிளாஸ்ரிக் பொருள்களுக்குப் பதிலாக பனை சார் உற்பத்திகளை ஆலயத் திருவிழாக் காலங்களில் பயன்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.



வேலணை பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் நமசிவாய கருணாகர குருமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த அமர்வில் ஈ.பி.டி.பி உறுப்பினர் திருமதி அனுசியாவால் முன்வைக் கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

தீவகத்தில் பனை வளம் சிறப்பாக காணப்படுகிறது.பனை சார் உற்பத்திகள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. அவற்றுக்கு சந்தை வாய்ப்பு சரியாக கிடைத்தால் அவர்களின் வாழ்வாதாரம் சிறப்பாக அமையும்.

நாட்டில் பிளாஸ்ரிக் தடை பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.அதற்கு மாற்று பொருள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடைபெறுகிறன.இந்த நிலையில் எம்மிடம் உள்ள பனை சார் உற்பத்திப்பொருள்களை முன்னிலைப் படுத்தி பிளாஸ்ரிக் பாவனையை குறைக்க அல்லது கட்டுப்படுத்த முடியும்.

உடனடியாக பிளாஸ்ரிக்கை கட்டுப்படுத்தல் சாத்தியம் அற்றது.ஆனால் எமது பிரதேசத்தில் உள்ள பனை வளங்களை முன்னிலைப்படுத்தி நாம் எடுத்துக் காட்டான சில நடவடிக்கைகளை முன் வைக்க முடியும்.

ஆகவே சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் பனை சார் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்யவும் ,பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிளாஸ்டிக்கிலான பைகள் ,அர்ச்சனைத் தட்டுக்கள் ஆகியவற்றுக்கு பதிலாக பனை சார் உற்பத்தி பொருள்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஆலய நிர்வாக சபையினருக்கும் கடிதம் மூலம் தெரியப் படுத்தி பிளாஸ்ரிக்கை கட்டுப்படுத்தி பனை வளத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சபை மீது வழக்கு போடுவேன்**

சபையின் எல்லைக்குள் நடைபெறும் சட்ட விரோதமான கட்டடங்களை அகற்றுவதற்கு சபை பின்னடிக்கிறது. ஆகவே சபை மீது வழக்கு தொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் செந்தூரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபையின் அனுமதி இன்றி கட்டப்படும் கட்டடம் ஒன்றுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சபைக்கு உள்ளது. ஆனால் நான் அவ்வாறு அமைக்கப்படும் கட்டடம் ஒன்றுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கடந்த 6 மாதங்களாக இங்கு கத்திக் கொண்டு இருக்கிறேன்.

ஆனால் இன்னும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை.ஆகவே சபை மீது நான் வழக்கு தொடருவேன் -என்றார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், மூன்று முறை சட்ட விரோதமாக அமைக்கப்படும் கட்டட வேலைகளை நிறுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டது.ஆனால் அவர்கள் வேலையை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.ஆகவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

**பிரதேச வளங்களைச் சுரண்டுவதற்கு பிரதேச செயலர் தூண்டுதலாக உள்ளார்**

வேலணை பிரதேச செயலர் சபையின் தீர்மானங்களுக்கு மரியாதை கொடுக்காமல் பிரதேச வளங்களை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குவது போல அவரின் செயற்பாடுகள் அமைகிறன என்று ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் எஸ்.பிரகலாதன் சபையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பிரதேசத்தில் மணல் அகழ்தல், கடல் அட்டைப் பண்ணைகளை அமைத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு சபையில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிரதி வேலணைப் பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதில் என்ன விடயங்களை கையாண்டு இந்த அனுமதிகள் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.

எமது பிரதேச வளங்கள் அழியக் கூடாது என்பதற்காகவும் ,எமது பிரதேசத்தில் உள்ளவர்கள் அதில் பயன் பெற வேண்டும்,வேலை வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதற்காக இது தொடர்பில் சபையில் தீர்மானங்களை எடுத்தோம்.

ஆனால் அதை எல்லாம் அவர் பொருட்படுத்தாமல் சுயதீனமாக பிரதேச செயலர் செயற்படுகிறார்- என்றார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலருடன் நேரில் சந்தித்து கலந்துரையாடுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

**பற்றைகள் அகற்றப்படவேண்டும்**

சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பல்வேறு இடங்களில் பற்றைகள் வளர்ந்து உள்ளன. அவை சிரமதானம் செய்யப்பட வேண்டும்.

மாடுகளை வெட்டுதல் போன்ற பல்வேறு சட்ட விரோதச் செயற்பாடுகள் இந்த புதர் காட்டில் நடைபெறுகிறது. ஆகவே பற்றைகள் வெட்டப்பட வேண்டும்.தனியார் காணி என்றால் அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மனித வலு மற்றும் பெக்கோ இயந்திரம் மூலம் பற்றைகள் வெட்டும் செயற்பாடு நடைபெற்று வருகிறது. பொது அமைப்புகளின் ஆதரவை பெற்று இந்தப் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார். (ஐ-7)

---



## வட்டு மத்திய கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ்ப்பாணம் வட்டு மத்திய கல்லூரியில் திறன் வகுப்பறை ஒன்று கடந்த புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

இந்த வகுப்பறைக்கான உபகரணங்களை சித்தன் கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இலண்டனில் வசித்து வருபவருமான ச.சு. நித்தியானந்தன்.அவரது தந்தையாரது பெயரில் உருவாக்கப்பட்டு இலண்டன் நகரில் செயற்படும் வரும் ரட்ணம் பவுன்டேசன் ஊடாக இலண்டனில் வசிக்கும் கிருபாகரனின் உறவினரான கிரி சாந்த னால் நிதியுதவி வழங்கப்பட்டது. (ஐ)

---

## மகளிர் தின நிகழ்வுகள்



கொடிகாமம், மார்ச் 23

கொடிகாமம் வடக்கு கிராம மாதர் அபிவிருத்தி சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் சங்க பணிமனையில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு தலைவி திருமதி லிகிதரதி சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சமூக சேவகி திருமதி அன்ரனி பிறேமராசா ஜெயந்தி, சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி அலுவலகர் ப.சதீஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி யோகேஸ்வரி சுரேஸ்குமார், மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் கு.பரமானந்தம், கொடிகாமம் வடக்கு அபிவிருத்தி அலுவலகர் திருமதி அ.திருவேணி, சமுர்த்தி அலுவலகர் திருமதி ம.சிந்துஜா, முன்னாள் அபிவிருத்தி அலுவலகர் ஜெகராசா, சுகாதாரப் பொதுப் பரிசோதகர், மாதர் சங்க உறுப்பினர்கள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினர் 2014 ஆம் ஆண்டு மாதர் அபிவிருத்தி சங்கத்துக்கு காணி அன்பளிப்பு செய்திருந்தார். அந்த காணியில் மாதர் சங்கத்துக்கெனப் பொது மண்டபம் அமைக்கப்பட்டு முதன் முதலாக 2019 ஆம் ஆண்டு மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவகி மதிப்பளிக்கப்பட்டார். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் மாதர் சங்க உறுப்பினர்களின் பெண்ணின் பெருமை என்ற நாடகமும் இடம்பெற்றன. (ஐ-159)

---

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இவ்வருடத்துக்கான முதலாவது யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் ஏப்ரல் எட்டாம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இணைத் தலைவர்களான கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறுமென மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ஐ-9)

---

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

உரும்பிராய் மடத்தடி ஞானவைரவர் ஆலய மணவாளக்கோல விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு 108 சங்காபிசேகம் மற்றும் வசந்த மண்டபபூசை நடைபெற்று வைரவர் பெருமான் திருவீதியுலா வரும் அலங்கார காட்சியும் இடம்பெறும்.

அதனை தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-ரி)

---

## சரஸ்வதி சிலை திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலை திறப்பு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக கல்வி வலயப் பணிப்பாளர் ஆ.இளங்கோ,சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவன் த.கருணாகரமூர்த்தி, பா.அ.நி.குழு செயலாளர் வி.குருபவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-ரி)

---

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம் மார்ச் 23

தாவடி அருள்மிகு அம்பலவாணர் வேத விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்களுக்கு உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ஐ-ரி)

---

## வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி மார்ச் 23

தென்மராட்சி பிரதேசத்தில் துரித கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் 96 வேலைத் திட்டங்களுக்கென 93.6 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் இந்தத் திட்டத்தில் 93 வேலைத் திட்டங்களை மேற்கொள்ள 86.2 மில்லியன் ரூபாவினை அவர் ஒதுக்கியிருந்தார்.

இதேவேளை கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தென்மராட்சி பிரதேசத்தில் 37 வேலைத்திட்டங்களை மேற்கொள்ள 50 மில்லியன் ரூபா வினை ஒதுக்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

# சைவ மக்களின் காணிகளை சுவீகரிப்பது அநீதியானது

## கலாநிதி ஆறு திருமுருகன் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கீரிமலை நகுலேச்சரத்தில் சைவ மக்களின் நிலங்களை அரசு சுவீகரிக்க முயற்சி செய்வதும், ஆன்மிகச் சூழலை சுற்றுலா மையமாக அமைக்கத் திட்ட மிட்டுள்ளமையும் அநீதியான செயல் இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலயத் தலைவருமான கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது:

சரித்திர முக்கியத்துவம் மிக்க கீரிமலை நகுலேச்சர சூழலில் கீரிமலை காங்கேசன்துறை வீதியிலுள்ள கோவில்கள், தனியார் நிலங்கள், சமய நிறுவனங்களின் நிலங்களைக் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களிடம் ஒப்படைக்காத அரசு தற்போது அந்தப் பிரதேசத்தை சுவீகரிக்கத் திட்டமிடுவது மிக அநீதியான செயலாகும்.

சித்தர்களின் சமாதிகள், சடையம்மா மடம், கிருஷ்ணன் கோவில், சிவன் கோவில், பாதாள கங்கை தீர்த்தசேத்திரம், கதிரையாண்டவர் கோவில் உட்பட அப்பாவி மக்களின் நிலத்தைச் சுவீகரிக்கத் திட்டமிடுவது மிகத் துரோகமான செயலாகும்.

நீண்டகாலமாக வலி.வடக்கு மக்கள் இந்தப் பகுதியை கையளிக்குமாறு விடுத்த வேண்டுதலுக்கு அரசு செய்யும் கைமாறு இதுதானா?

இவ்விடயம் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்து கலாசார அமைச்சர் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுக்கவேண்டும்.

காங்கேசன்துறையில் ஹோட்டல் அமைத்து வாணிபம் செய்யும் அப்பாவி மக்களின் நிலங்கள் மற்றும் சுக்கிரவார திருகோணச் சத்திரம் அறக்கட்டளையின் 106ஏக்கர் நிலம் யாவும் விரைவில் கையளிக்க வேண்டியது அரசின் கட்டாய கடனாகும் என அவர் தனது அறிக்கையில் குறி ப்பிட்டுள்ளார். (ஐ)

## பாட்டுப்பாடியதால் இடையூறு என்று விசித்திர முறைப்பாடு

கொடிகாமம், மார்ச் 23

தமது காணிக்குள் நின்று சினிமாப் பாடல்கள் பாடியதை தாங்கமுடியாத அயல் வீட்டக்காரர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றது.

வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து மூவரைப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மூவரையும் தலா இரண்டரை லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மருதடி ஆலய சுற்று வீதியில் நாய்களால் பெரும் சிரமம்

### அடியார்கள் கவலை

வலி.தென்மேற்கு, மார்ச் 23

மானிப்பாய் மருதடி ஆலய வீதிகளில் நாய்கள் படுத்துறங்குவதால் அங்கு வரும் அடியார்கள் பெரும் சிரமங்களுக்கும் உபாதைகளுக்கும் உள்ளாகிறார்கள். குறிப்பாக குட்டை நாய்கள் படுத்துறங்குவதால் அங்கப் பிரதிஷ்டை செய்பவர்கள் தொற்றுநோய்கள் ஏற்படலாம் என்று அஞ்சுகிறார்கள்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

குடாநாட்டில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். வருடாந்த உற்சவத்தைத் தொடர்ந்து மேற்படி ஆலயத்துக்கு தினசரி பல நூற்றுக்கணக்கான அடியார்கள் வருவது வழக்கம்.

அதிகாலை 4 மணியிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட ஆண்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதிலும் பெண்கள் அடியளிப்பதிலும் ஈடுபடுகிறார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட 7 பேர் கொண்ட தர்மகர்த்தா சபையால் வழிநடத்தப்பட்டு வந்த மேற்படி ஆலயம் கடந்த இரு வருடங்களாக மல்லாகம் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட 7பேர் கொண்ட பெறுநர் குழுவினரால் வழிநடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் ஆலயத்திலுள்ள 4 வீதிகளிலும் 10இற்கு மேற்பட்ட நாய்கள் இரவு பகலாகப்படுத்துறங்குவதால் ஆலயத்துக்குச் செல்ல அடியார்கள் அஞ்சுகிறார்கள்.

குட்டை நாய்களின் நடமாட்டத்தால் அங்கப் பிரதிஷ்டை செய்யும் அடியார்கள் தொற்று நோய்கள் ஏற்படலாம் என்று தயங்குவதால் இவர்களின் நலன்கருதி நாய்களை அப்புறப்படுத்தவதற்கு பெறுநர் குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அடியார்கள் கோரியுள்ளனர். (ஐ-115)

## ஹவாய் ஆதீன முதல்வர் யாழ். வருகை!!

அமெரிக்க, ஹவாய்சைவ ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனைக்கு வருகை தந்தார். அவருடன் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகனும் வருகை தந்தார்.

## சபை வருமானம் இழப்பை தடுத்து நிறுத்த வலியுறுத்து

வலி.தென்மேற்கு, மார்ச் 23

வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலானமயானங்களுக்குவேலிகள், நுழைவாயிலுக்கான கேற்றுகள் இல்லாமையால் கட்டணம் செலுத்தப்படாமல் சடலங்கள் தகனம் செய்யப்படுகின்றன. இதனால் சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தில்பாதிப்புஏற்படுகின்றது. இவ்வாறு சபை உறுப்பினர் கே.வன்னியசேகரம் தெரிவித்தார். இது உடனடியாகத்தடுத்துநிறுத்தப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.


வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் அமர்வு தவிசாளர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.தென்மேற்குப்பிரதேசத்தில்11இந்து மயானங்கள் உள்ளன. இவற்றில் அதிகமானமயானங்கள்வேலிகள், கேற்றுகள் இல்லாமல் திறந்த வெளியரங்கு போல் காட்சியளிக்கின்றன. பிரதேசத்தின் அபிவிருத்தியைக்கருத்தில்கொண்டுசடலங்கள் தகனம் செய்வதற்கு ரூபா ஆயிரம் வீதம் வரி அறவிடுவதென்று பிரதேச சபையின்மாதாந்தக்கூட்டத்தில்ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கமைய சில மயானங்களில் மட்டும் பணம் அறவிடப்படுகின்றது. சில மயானங்களுக்கு உறுதிகள் இல்லாமையால் வேலி அமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்துதவிசாளர்கருத்துத்தெரிவிக்கும்போது காணிகளுக்கான உறுதிகள் தயாரிப்பதற்கானவேலைகள்துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சபை நிதியிலிருந்து சில மயானங்கள் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளன. ஏனையமயானங்களும் படிப்படியாக வேலிகள் அமைத்து அபிவிருத்தி செய்யப்படும் என்று தெரிவித்தார். (ஐ-115)



## கண் சிகிச்சைகள் பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

மந்திகை ஆதார மருத்துவமனையில் ஆரம்ப கண் சிகிச்சைகள் பிரிவு நேற்று தொடக்கம் ஆரம்பமானது.

இந்தக் கண் சிகிச்சைப் பிரிவு பிரதி வெள்ளிக்கிழமைகளில் பொதுமக்களுக்கும், சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கும் முற்பகல் 9 மணிக்கு நடைபெறுமென மருத்துவமனை செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மந்திகை ஆதார மருத்துவமனையில் நீண்டகாலமாக கண் சிகிச்சைப் பிரிவால் திருப்திகரமான சேவை வழங்க முடியாத நிலைமை நிலவி வந்தது.

தற்போது மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை வடமராட்சி பிரதேச மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9,159)

## சாவகச்சேரி நகரினுள் பெண்களுக்கு உதவ தனியான அமைப்பு வேண்டும்

### நகர சபை உறுப்பினர் திருமதி லலிதாராணி வலியுறுத்து

சாவகச்சேரி, மார்ச் 23

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சபை பெண் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பினை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் திருமதி லலிதாராணி ரவீந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேர்நகரசபை அமர்வு தவிசாளர்சிவமங்கைஇராமநாதன்தலைமையில்அண்மையில்இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

சபையின் பெண் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பினை உருவாக்க வேண்டும். இந்த அமைப்பின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும்உள்ளபெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் வட்டார ரீதியில் தெரிவு செய்யப்படவேண் டும்.

அவர்கள்ஊடாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், பொருளாதாரநிலையில்பின் தங்கிய அதிகளவுபெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள்பெண்மாற்றுத்திறனாளி களைக் கொண்ட குடும்பங்கள் போன்றவற்றைத் தெரிவு செய்து அரசசார்பற்ற நிறுவனங்கள்மூலம்உதவிகள்பெற்றுக்கொடுக்கப்படும். மகளிர் அமைப்புகள் ஊடாக வாழ்வாதார உதவிகள் வழங்க பல அரச சார்பற்ற நிறுவனங்களும் பொது அமைப்புகளும் முன்வந்துள்ளநிலையில்உதவிகள் தேவையானவர்களின்விபரங்கள் எம்மிடம் இல்லாதமைவேதனையளிக்கிறது.

ஒவ்வொரு வட்டாரத்திலும் சபையின் மூலம் மகளிர் குழுக்களைத்தெரிவுசெய்து அந்த குழுக்கள் ஊடாக உதவிகள் வழங்கப்படலாம்.

உதவிகள் தேவைப்படும் பெண் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் விவரங்கள் விரைவில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளித்து அவர்கள் மூலமும் உதவிகள் பெற்றுக் கொடுக்கலாம் - என்றார். இது தொடர்பாக அடுத்த சபை அமர்வில் விவாதித்து தொடர் நடவடிக்கை எடுப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார். (ஐ-9)



## குருளைச் சாரணருக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 23

சாவகச்சேரி மகளிர் கல்லூரி குருளைச் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இரு அமர்வுகளாக நேற்று நடைபெற்றது.

அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், வலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், கிளிநொச்சி சாரணர் மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி அங்கயற்கன்னி அங்கதன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் 18 குருளைச் சாரணர்களுக்கு சின்னங்கள் சூட்டப்பட்டன. (ஐ-9)

## தமிழர் ஒன்றியத்தின் முதலாவது மாநாடு

வடமராட்சி, மார்ச் 23
சிறிலங்கா சுகந்திர தமிழர் ஒன்றியத்தின் முதலாவது மாநாடு யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்தியடியில் உள்ள சிறிலக்ஸ்மி பிராசா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
சுகந்திர தமிழர் ஒன்றிய தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. "மக்கள் சக்தியே எழுச்சி" என்னும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173,159)

## போதைப்பொருள் வைத்திருந்த நபருக்குச் சிறையும் தண்டமும்

யாழ்ப்பாணம், மார்ச் 23
கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தவருக்கு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்று தீர்ப்பளித்தது.
அவர் 10 ஆயிரம் ரூபா தண்டம்செலுத்தவேண்டும் என்றும் தவறின் மேலும் 2 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் மன்று சுட்டிக் காட்டியது.
20 வயதுடைய அவரை குறித்த குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸார், நேற்றுமுன்தினம் மன்றில் முற்படுத்தினர். அவர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-37)

### மாதகலில் வீடுடைத்துத் திருடியோர் என்ற சந்தேகத்தில்

# நகைகளை விற்க முயன்றோர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாண நகரப் பகுதியில் நகைகளை விற்பனை செய்ய முயன்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.



மாதகல் பகுதியில் நேற்று முன்தினம் பகல் வீடு உடைத்து 15 பவுண் தங்க நகைகளைத்திருடிஅவற்றை விற்பனை செய்ய முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் தாம் அவர்களைக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குடும்பத்தினர் தேவை கருதி வெளியே சென்றிருந்த வேளை வீட்டை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 15 பவுண் நகைகள், இரண்டு அலைபேசிகள் என்பவற்றைத் திருடிச் சென்றனர்.
அதுபற்றி இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறையிடப்பட்டது. பொலிஸார் விசாரணைகளைத் தொடக்கிய நேரத்தில், யாழ்ப்பாண நகைக் கடை ஒன்றில் நகைகளை விற்பனை செய்ய முயன்ற இருவர் மீது சந்தேகம் கொண்ட கடை உரிமையாளர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிஸார் அவர்களைக் கைது செய்து விசாரணை செய்தபோது அவர்கள் விற்க முயன்றது திருட்டு நகைகள் என பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இருவரும் 24, 23 வயதுகளையுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-105)





## திரிபீடகாபி வந்தனா வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23
திரிபீடகாபி வந்தனா வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலும் நிகழ்வுகள் நடைபெற்றன.
திரிபீடகாபிவந்தனா வாரத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் நாக விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இலங்கை பிக்கு பரம்பரையின் உன்னத பங்களிப்பில் பேணப்பட்டு வந்த தூய பௌத்த போதனைகள் உள்ளடங்கிய புனித திரிபீடகத்தைக் கடைப்பிடிக்குமாறு அரச தலைவரால் அறிவித்தல்வழங்கப்பட்டது. நாடு முழுவதும் கடந்த 16 ஆம்திகதிதொடக்கம் இன்று வரை திரிபீடகாபிவந்தனா வாரமாக கடைப்பிடிக்குமாறும் அறிவிக்கப்பட்டது.
இதனை முன்னிட்டு திரிபீடகாபிவந்தனா வாரம் நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் அதனை வடக்கு மாகாணத்தில் சிறப்பிக்கும் வகையில் ஆளுநர் அலுவலகத்தால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விகாரைகளின் விகாராதிபதிகளுக்கான தானம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் நாக விகாரையில் இடம்பெற்றது.
நிகழ்வில் திரிபீடகம் தொடர்பில் சிறப்பு ஆய்வுகளை மேற்கொண்டுவரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசிரியர் கலாநிதி கிரிஷ்ணராஜாவால் திரிபீடகம் தொடர்பில் சிறப்பு சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பௌத்த பிக்குகளுக்கான தானம்வழங்கும்நிகழ்வும் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலர், பிரத்தியேக செயலர் உட்பட ஆளுநர் செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர். (ஐ-7)

## இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாண மாவட்ட இசைக் குழு கலைஞர் சங்கம் நடத்தும் "யாழ் மெல்லிசை வாசம்" சங்கிலியன் பூங்கா வளாகத்தில் (கிட்டுப் பூங்கா) இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
தலைவர் குமணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பிரபல அறிவிப்பாளர் அப்துல்ஹமீத், பிரபல இசையமைப்பாளர் அப்ஷராஸ் எம்.மோகன்ராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)


## ஏ.ஆர்.வி தடுப்பூசி ஓரளவு கிடைத்தது

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவ மனைகளுக்கு விசர் நாய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி ) மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தற்போது கிடைத்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.
விசர்நாய்க் கடிக்கு ஏ.ஆர்.வி என்று சொல்லப்படும் வகை தடுப்பூசி மருத்துவ மனைகளில் ஏற்றப்படுகிறது. கடந்த காலங்களில் அதன் இருப்பு மருத்துவ மனைகளில் வெகுவாகக் குறைந்துள்ளது. அநேகமான மருத்துவ மனைகளில் அது இல்லை. இந்த நோய் நிலைமைக்கு உள்ளாகிய நோயாளர் ஒருவரை வேறு மருத்துவ மனைக்குச் சென்று அந்த ஊசியை ஏற்றுமாறு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனால் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குச் சென்று ஊசி போடும் நிலை உருவாகியது.
இது சுகாதாரத் துறையினரிடம் கேட்டபோது, இந்த ஊசிப் பற்றாக்குறை நாடு முழுவதும் நிலவுகிறது. முன்வைக்கும் கோரிக்கையின் அளவை விட மிகக் குறைந்த அளவே அவை பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்துக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஏ.ஆர்.வி அண்மையில் கிடைத்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. ஒரு மருத்துவ மனையில் இந்த ஊசி பற்றாக்குறை நிலவும்போது வேறு மருத்துவ மனையில் இருந்து அதனை பெற்றுக் கொடுப்பதற்கும், நாய் கடித்தவருக்கு அந்த ஊசி போடாமல் விடும் அளவுக்கு எந்த செயற்பாடும் நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## வீமன்காமம் நபர் மறியலில் அடைப்பு

### கொள்ளையர் என்ற சந்தேகத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 23
வீடு புகுந்து கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த 27 வயதுடைய அவரை, 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.
அவர் பல வன்முறைகளில் தொடர்புபட்டிருந்தார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். தெல்லிப்பழை கட்டுவனில் அண்மையில் அரச அலுவலரின் வீடு புகுந்து, அங்கிருந்தவர்களைக் காயப்படுத்தி பணம், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.
இந்தச் சம்பவத்தில் ஏற்கனவே இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணம், நகைகள் மீட்கப்பட்டன. (த-26)



அளவெட்டி தெற்கு முத்துமாரி அம்பாள்ஆலய மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வுநேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தர்மகர்த்தா சபைத் தலைவர் தெய்வேந்திரம் தலைமையில்இடம்பெற்றது. (ஐ-63)

## எலிக் காய்ச்சலால் குடும்பத் தலைவர் சாவு?

யாழ்ப்பாணம், மார்ச் 23
காய்ச்சல் காரணமாக குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எலிக் காய்ச்சல் காரணமாக இவர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை சேர்ந்த மயில்வாகனம் தங்கேஸ்வரன் என்னும் 3 பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.
கடந்த 17 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக பீடிக்கப்பட்ட அவர் 18 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் சிகிச்சை பெற்றுள்ளார். இருப்பினும் காய்ச்சல் அதிகரித்த நிலையில் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இவ்வாறு சேர்க்கப்பட்ட நோயாளி நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இவருக்கு பீடிக்கப்பட்ட காய்ச்சல் எலிக் காய்ச்சலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
இவரது சாவு தொடர்பில் மேற்கொண்ட திடீர் சாவு விசாரணை அதிகாரி காய்ச்சலின் தன்மையை உறுதி செய்யும் வகையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இதனையடுத்து இடம்பெற்ற பரிசோதனையின்போது உடலின் கூறுகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-105)

## தவக்கால தியானங்கள்

### சட்டத்துக்காக மனிதனா? மனிதனுக்காகச் சட்டமா?

இன்றைய உலகில் அனேகமான நாடுகளின் சட்டங்களும் கடவுள் மோசே வழியாகத் தந்த பத்துக் கட்டளைகளையே அடித்தளமாகக் கொண்டுள்ளன. நேர் வழி நடக்க, அன்பு பாதையில் பயணிக்க, வாழ்வை ஒழுங்குபடுத்தச் சட்டங்கள் உதவுகின்றன. எமது நாட்டிலும் அடிக்கடி அவசர சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன, மாற்றப்படுகின்றன. இறைவன் தந்த சட்டங்களை மதிக்காது மிதித்து நடக்க முற்படும்போது மனித உரிமைகளை நசுக்குகின்ற சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. சட்டத்துக்கும் அன்புக்கும் வேறுபாடு இருக்குமானால் அது சட்டமல்ல. சட்டத்துக்காக மனிதனா? மனிதனுக்காக சட்டமா?

"நாம் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைப்படியே நியமங்களையும், முறைமைகளையும் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். எனவே நீங்கள்போய் உரிமையாக்கிக் கொள்ளும் நாட்டில் அவற்றைப் பின்பற்றவேண்டும். அதுவே மக்களினங்கள் முன்னிலையில் உங்கள் ஞானமும் அறிவாற்றலுமாய் விளங்கும்" (இச 4:5)

கடவுளின் அன்புக் கட்டளை எம் இதயத்தில் பொதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து அதைப் பின்பற்றும்போது வெளிச் சட்டங்கள் தேவைப்படாது. சட்டங்களை அன்பின் சரத்துடன் கடைப்பிடிக்கக் கற்றுத் தந்த இயேசுவின் விழுமியங்களான அன்பு, கருணை, மன்னிப்பு, மனித மாண்பு, நம்பிக்கை, பகிர்தல் ஆகியவற்றைக் கடைப்பிடித்து இயேசுவின் சீடர்களாக சான்று பகர்வோம்.

- எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

## வீட்டுத்திட்டத்துக்கு
# வழங்கப்பட்ட பணம் போதாது பாரதிபுரத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, மார்ச் 23

வீட்டுதிட்டத்துக்கான பணம் உரியமுறையில் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து வவுனியா பாரதிபுரம். கிராம மக்கள் ஆர்பாட்டபேரணி ஒன்றை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.

பாரதிபுரம் பொதுநோக்கு மண்டபத்துக்கு முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊர்வலமாக பாடசாலை வரை சென்றிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள்

கடந்த வருடம் வீடமைப்பு அதிகாரசபையால் 140 வீடுகள் எமது கிராமத்துக்கு வழங்கபட்டன. அதற்கான நிதி கட்டம் கட்டமாக வழங்கபட்டு வந்தநிலையில், நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையால் மிகுதிப் பணம் எமக்கு தரப்படவில்லை. நாம் காணிப் பத்திரங்களை ஈடாகவைத்தும், கடன்களை பெற்றும் வீடுகளை பகுதியளவில் அமைத்துள்ளநிலையில், அதனைப் பூரணபடுத்தமுடியாத நிலையில் இருக்கிறோம்.

அடிக்கல் நடும் போது. இருந்த விலையை விட தற்போது கட்டுமான பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.

இது தொடர்பாக வீடமைப்பு அதிகாரசபையிடம் கேட்டால் அதற்கான பணம் தமக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கின்றனர்.

எனினும் ஏழரை இலட்சம் மதிப்பிலான புதிய வீட்டு திட்டங்களுக்கான அடிக்கல் இங்கு நட்டுவைக்கபடுகின்றது. பணம் இல்லாடிவிடில் அது எப்படி சாத்தியம். எனவே எமக்கு வழங்கபடவேண்டிய மிகுதி பணத்தை தருவதுடன், கட்டுமான பொருள்களின் விலை அதிகரிப்பை கருத்தில் கொண்டு ஐந்து இலட்சத்தைவிட மேலதிகபணம் ஒதுக்கிதரப்படவேண்டும் என்று தெரிவித்தனர். (க-110)

## காணிச் சண்டையை அடுத்து
# மன்னார் உள்ளூராட்சி தவிசாளர்கள் இருவர் நேற்று பிணையில் விடுவிப்பு

மன்னார், மார்ச் 23

மன்னார் நகர சபையின் தலைவர், மன்னார் பிரதேச சபையின் தலைவர் ஆகியோர் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சொந்தப் பிணையில் செல்ல மன்னார் நீதிமன்று நேற்று அனுமதித்தது.

மன்னார் நகர சபைக்கும் மன்னார் பிரதேச சபைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள காணி யாருக்கு உரித்து என்ற விடயம் பூதாகரமாகியது. இரு சபையினரும் பிடுங்குப்பட்டிருந்தனர்.

இந்த விவகாரம்எல்லை தொடர்பில் முறுகல் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலைய்த்தில் பிரதேச சபையினர் முறைப்பாடு செய்திருந்தனர். அங்கும் இணக்கமின்றி நீதிமன்றின் கவனத்துக்குப் பொலிஸார் கொண்டு சென்றிருந்தனர்.

இந்த வழக்கு மன்னார் நீதி மன்றில் ரீ.சரவணராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்னார் நகர சபையின் தலைவர், மன்னார் பிரதேச சபையின் தலைவர் மற்றும் மன்னார் நகர சபை, பிரதேச சபைகளின் உறுப்பினர்களும் மன்றில் பிரசன்னமாகி இருந்தனர்.

விசாரணையின் பின்னர் நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் தலைவர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சொந்தப் பிணையில் செல்ல அனுமதித்தார். வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (து-56)

## பேருந்து விபத்து

அளவெட்டி, மார்ச் 23

தனியார்பேருந்து ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இதில் பேருந்து முன்பக்கமும் பலத்சேதத்துக்கு உள்ளாகியதுடன் அதில்பயணம் செய்த பயணி ஒருவர் காலில் பலத்தகாயமடைந்தார். இதுதொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ஜ-63)



## ஊரக எழிச்சி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் சிபாரிசில் நடைபெற்று வரும் ஊரக எழிச்சி வேலைத்திட்டம் பற்றிய கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

பிரதேச செயலக மண்டபத்தில் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் , பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் மற்றும் ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர் .

வேலைகளின் தரம் மற்றும் வீதிகளின் அகலம் ஒப்பந்ததாரர்களுக்கான நிபந்தனைகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இது இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் எனவும் இம் முறை 200 மில்லியன் ரூபா வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது எனவும் தவிசாளர் கலந்துரையாடலில் தெரிவித்தார். இந்த வேலைத் திட்டத்துக்கு அந்தப் பகுதிகளிலுள்ள மக்களும் பொது அமைப்புகளுமே பொறுப்பு. காரணம் பொருள்களின் தரம் மற்றும் பாதுகாப்பு , தொழில்நுட்ப உத்தியோகத்தர் மேற்பார்வையிட வராத வேளையிலும் நீங்களே பொறுப்பு எனெனில் அது உங்களுக்கான வீதிகள் எனவும் கூறினார். (க-222)

## பற்றி எரியும் வயல்வெளிகள் புகை மண்டலமாக காட்சியளிக்கும் வீதி

வவுனியா, மார்ச்.23

வவுனியாவில் அறுவடைசெய்யபட்ட நிலையில் உள்ள வயல்வெளிகள் எரியூட்டபடுவதால் வீதிகள் எங்கும் புகைமூட்டமாக காட்சியளிப்பதுடன், போக்குவரத்துச் செய்வதிலும் பொதுமக்கள் அசௌகரியங்களை சந்தித்துவருகின்றனர்.

கடுமையான வெப்பநிலை நிலவிவரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்திவருகின்றது.

வவுனியா குளத்துக்குட்பட்ட பூந்தோட்டம் வீதியின் இருபக்கமும் அமைந்துள்ள வயல்வெளிகள் கடந்த சிலநாள்களாக எரிக்கபட்டுவருகின்றன.

நேற்று முன் தினம் வவுனியா மருத்துவமனைக்கு பின்பக்கமா அமைந்துள்ள வயல்வெளிகள் எரியூட்டபட்டமையால், பேருந்துநிலைய பகுதி, எ9 வீதி என்பன புகைமூட்டமாக காட்சியளித்திருந்தது. போக்குவரத்தை மேற்கொள்வதிலும் அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தது. வயல்வெளியூடாக பரவும் தீ வேறு பகுதிகளுக்கும் பரவிச் செல்கின்ற நிலைகாணப்படுகின்றது.

ஒருசில விவசாயிகள் உழவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்வாறு தீயை மூட்டுவதாக குற்றம்சாட்டும் பொதுமக்கள், சில விசமிகளும் இவ்வாறான செயலை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர். கமக்காரர் அமைப்புகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்பாகவுள்ளது. (க-110)



## தலைவர்களுக்கு சின்னம் சூட்டல்

வவுனியா,மார்ச்.23
வவுனியா அல்இக்பால் மகாவித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் பாடசாலை பிரதான ஒன்றுகூடல் மைதானத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலையின் மாணவத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 27 உயர்தர மாணவ, மாணவிகளுக்கே இந்தச் சின்னம் சூட்டப்பட்டதுடன், அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த மாணவர்களுக்கான சின்னங்கள் அதிபர் ஏ.கே.உபைத் மற்றும் மூத்த ஆசிரியை திருமதி கமலதாசன் ஆகியோரால் அணிவிக்கப்பட்டது. (க-110)

## கொத்துக்குண்டுகளால்
# தமிழ் மக்களைக் கொன்றது கருணைக் கொலையாகுமா?
### கரைத்துரைப்பற்று பிரதேச சபை அமர்வில் வெடித்தது விவாதம்

முல்லைத்தீவு, மார்ச் 23
முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை அமர்வில் பெரும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன இறுதி போரின்போது கொத்துக்குண்டுகளையும், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையும் பயன்படுத்தி தமிழ் மக்களை கொன்று குவித்தது, படுகொலையில்லாது கருணைக்கொலையா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வெலி ஓயா பகுதி பொதுஜன பெரமுன உறுப்பினர்கள், ஆளும் தரப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குமிடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கடந்த காலங்களில் மனித உரிமைகள் மீறப்படவில்லையெனவும், அரசால் படுகொலைகள் எதுவும்செய்யப்படவில்லையெனவும், விடுதலைப்புலிகளாலேயே போர் உருவானதாகவும் தெரிவித்தனர். இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள், இறுதி போரின்போது கொத்துக்குண்டுகளையும், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையும் பயன்படுத்தி தமிழ் மக்களை கொன்று குவித்தது, படுகொலையில்லாது கருணைக்கொலையா? என்று கேள்வி எழுப்பினர்.

அத்தோடு கடந்த காலங்களில் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் அரசினால் அதிகமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தனர். ஜெனீவாவில் இடம்பெறும் மனித உரிமை தொடர்பான விசாரணைகள் குறித்து நேற்று முன்தினம் சபையில் பேசப்படும்போதே இவ்வாறு இரு தரப்பினர்களுக்குமிடையில் காரசாரமான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன. (க-246)

## விபத்தில் இளைஞன் காயம்

கிளிநொச்சி, மார்ச் 22
பாண் விற்பனை செய்யும் முச்சக்கரவண்டியும், டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.
அதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.
இந்த விபத்து கிளிநொச்சி புதுக்காடு பகுதியில் நேற்று நடந்தது.
விபத்தில் அறத்தி நகரைச் சேர்ந்த இளைஞன் காயமடைந்தார்.



## வவுனியாவில் கடும்பனி

வவுனியா,மார்ச் 23
வவுனியாவில் நேற்றைய தினம் கடும் பனி மூட்டம் காணப்பட்டது இதனால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. காலை எட்டு மணியைக் கடந்தும் வவுனியாவில் உள்ள பிரதேசங்களில் பனி மூட்டம் நிறைந்து காணப்படுகின்றது.
இதனால் வீதிகளில் வாகனச் சாரதிகள்பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர். (க-110)

## கடைகள் தருமாறு கேட்டு 127 பேர் விண்ணப்பிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23
வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள 50 கடைகளையும் பாவனைக்கு வழங்கும் நோக்கில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு 127 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெறுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் தாண்டிக்குளம் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்துக்கான நிலத்தை விடுவிக்கக்கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் ஆட்சியிலிருக்கும்போது விடாப்பிடியாக நின்றதாலும் ஓமந்தையில் அமைப்பது பொருத்தமற்றது என்று எதிர்ப்புக் கிளம்பிய நிலையிலும் இரு இடங்களிலும் அன்றி வவுனியாவின் புறநகர்ப்பகுதியான மதகுவைத்தகுளம் பகுதிக்கு பொருளாதார மத்திய நிலையம் நகர்த்தப்பட்டது.

தற்போது ஒரு வருடம் முடிவுறும் தறுவாயில் அங்கே அமைக்கப்பட்ட 50 வர்த்தக நிலையங்களுக்கும் பகிரங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வாறு கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு 127 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கான நேர்முகத் தேர்வு 21,22 மற்றும் 25ஆம் திகதிகளில் கொழும்பில் உள்ள கிராமிய அபிவிருத்தி அமைச்சில் இடம்பெறுகின்றது.

21ஆம் திகதி 40 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 26பேரும் நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்ட 40பேரில் 23 பேரும் நேர்முகத் தேர்வில் தோற்றியுள்ளனர்.

நேர்முகத் தேர்வின்போது விண்ணப்பதாரிகளின் நிதி நிலமை, களஞ்சிய வசதி என்பவற்றுடன் வாகன வசதிகளும் முக்கியமாக கவனத்தில்கொள்ளப்படுகின்றது. குறித்த நேர்முகத் தேர்வாளர்களாக அமைச்சின் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோருடன் மாவட்ட மேலதிக செயலர் ஆகியோர் பங்குகொண்டுள்ளனர். (த-105)



## பரிசில் வழங்கல்

வவுனியா,மார்ச் 23
வவுனியாவில் அமைந்துள்ள மகளிர் சமாதான அமைப்பினால்நடத்தப்பட்ட மாவட்டமட்ட கவிதை மற்றும்சித்திரப் போட்டிகளில்வவுனியாபுதுக்குளம்மகாவித்தியாலயமாணவர்கள்வெற்றியீட்டியுள்ளனர்.
கவிதைப் போட்டியில் ரி. கல்பனதீக்கா முதலாமிடமும், எஸ். தனுசா இரண்டாமிடமும் பெற்றுள்ளனர்.
சித்திரப் போட்டியில் முதலாமிடத்தை ச.டனோஜனும், இரண்டாமிடத்தை ஆர். தினோசனும் மூன்றாமிடத்தை கஜமுகனும் பெற்றுக்கொண்டனர்.
மாணவர்களுக்கான பதக்கங்கள்மற்றும்பரிசுப்பொருள்களை பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி. தெ. இராஜேஸ்வரி, ஆசிரியர்சோ.ஜெயசுதன்ஆகியோர் வழங்கிவைத்தனர். (க-222)

## அரச வீடுகள் வழங்கப்படாத கிளிநொச்சி குடும்பங்கள் அவதி

கிளிநொச்சி, மார்ச் 23
2009ஆம் ஆண்டுக்குப்பின்னர் மீள்குடியமர்ந்தவர்களில் பலர் இன்றுவரை வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாமல் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி ,கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பாரதிபுரத்தில் 5 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு இன்று வரை வீட்டுதிட்டம் எதுவும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்தக் குடும்பத்துக்கு வீட்டுத் திட்டமும் இன்றி, பிள்ளைகளின் கல்வி நிலையும் பாதிப்படைவதோடு, வருடா வருடம் பருவகால மழைக்கும் அவலத்தை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நிரந்தரத் தொழில் இன்றி கூலிவேலைக்குச் சென்று குடும்பத்தை பராமரிக்கும் தலைவரால் வீட்டு வசதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இவர்களைப் போல் பல குடும்பங்கள் சொந்த நிலம் இன்மையால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.



2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்குடியமர்ந்தவர்களில் பலர் இன்றுவரை வீட்டுத்திட்டம் கிடைக்கப் பெறாமல் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த காலத்தில் முதல் 5 ஆண்டுகளும் சொந்த நிலம் இன்மை என்ற காரணத்தினால் வீட்டுத் திட்டம் மறுக்கப்பட்ட நிலையில் தற்போதும் அதே நிலமை நீடிப்பதாகவும் குடும்பத் தலைவர் கவலை தெரிவித்துள்ளார். (க-105)

## புலிகளின் தங்கத்தை தேடியதில் பொலிஸார் மீட்டது ஒரு ரூபாய்!

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் முதன்மை வீதியின் அருகில் விடுதலைப்புலிகள் காலத்தில் தங்கம் புதைத்து வைத்ததாக நம்பப்படும் வீட்டின் அறை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக தோண்டப்பட்டது.

அங்கிருந்து போர் நடைபெற்ற காலத்தில் மக்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் தடயங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. 2011 ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட ஒரு ரூபா நாணயக்குத்தி ஒன்று மீட்கப்பட்டது.

முல்லைத்தீவுப் பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் நீதிமன்ற அதிகாரிகள் தேடுதலில் ஈடுட்டனர்

# கண் சத்திரசிகிச்சை நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறப்பு

## மாவட்டத்திலேயே முதலாவது

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் முதன் முதலாகக் கண் சத்திர சிகிச்சை விடுதி ஒன்று நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது.



மீள் குடியேற்றத்தின் பின்னர் வன்னிப் பெருநிலப் பரப்பில் அதிகளவினான மக்கள் கண்புரை நோய்க்கான சிகிச்சையைப் பெற வசதியின்றி இருந்ததைக் கருத்தில் கொண்டு, மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் சிறப்பு கண் சத்திர சிகிச்சை முகாம்களை கிளிநொச்சி மருத்துவமனையில் தொடர்ந்து நடத்தி ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பார்வையை வழங்கினர். இதற்கான சிறப்பு கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இலங்கையின் பல பாகங்களிலிலும் இருந்து தொண்டு அடிப்படையில் வருகை தந்திருந்தனர்.

எனினும் தமது தனிப்பட்ட தொழில்சார் வணிக நலன்கள் கருதிச் செயற்படும் சிலரால் வழங்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் தனிப்பட்ட நெருக்கடிகள் காரணமாக 2015 ஆம் ஆண்டின் பின்னர் சிறப்பு கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சை முகாம்களை நடத்துவதற்கு வருகை தர மறுத்துவிட்டதாகக் கூறப்பட்டு வந்தது.

இதன் விளைவாக கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக கிளிநொச்சி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்புரை நோய் சத்திர சிகிச்சைக்கு தொலைவில் அமைந்திருக்கும் அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அவ்வாறு அரச மருத்துவமனைகளுக்குச் செல்பவர்களும் கண் சத்திர சிகிச்சைக்குப் பாவிக்கப்படும் பஞ்சு முதற்கொண்டு வில்லைகள் வரை தனியார் நிலையங்களில் வாங்கி வரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதாக பொதுமக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகளில் கடந்த சில வருடங்களாக சிறப்பு கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்படாது போனமைக்கும் சிலரது வணிக நலன்கருதிய திட்டமிட்ட வேலைகளே காரணம் எனச் சுகாதார திணைக்களத் தகவல்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் காண்டீபன் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு பொதுமக்களது அவலங்களைத் தொடர்ச்சியாக ஆதாரங்களுடன் எடுத்துக்கூறி அழுத்தம் கொடுத்து வந்ததன் பலனாக சிறப்புக் கண் சத்திர சிகிச்சை நிபுணர் கிரிதரன், கிளிநொச்சி மருத்துவமனைக்கு அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்தே இன்றைய தினம் புதிய விடுதி திறந்து வைக்கப்பட்டு கண் சத்திரசிகிச்சைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது காணப்படும் தரவுகளின் பிரகாரம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கண்புரை நீக்கச் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகத் தெரியவருகிறது. (க-214,6)

## வவுனியாவில் நேற்று திடீர் மின் தடை

வவுனியா, மார்ச் 23

வவுனியாவில் நேற்றுக் காலை 8.45 மணி முதல் 11.45மணி வரை சில பகுதிகளில் மட்டும் மின் தடை ஏற்பட்டுள்ளது இதனால் மாவட்ட செலயகம், பிரதேச செயலகம், வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பொதுமக்கள் அவல நிலைக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியாவின் பல பகுதிகளிலும் சுழற்சி முறையில் மின் வெட்டு இடம்பெற்று வருகின்றது. வவுனியா நகர மையப்பகுதியில் நகரத்துக்கு பல்வேறு தேவைகளுக்குச் சென்ற மக்கள் நேற்றுப் பெரும் அவல நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

எவ்வித முன்னறிவித்தலும் காலை 8.45 மணியளவில் ஏற்பட்ட மின் தடை முற்பகல் 11.45 மணியளவில் வழமைக்குத் திரும்பியுள்ளது. (க)




## உலர் உணவு பொதிகள் கையளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சியைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் தென்னங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன. கிளிநொச்சி திட்டமிடல் பணியகத்தில் வைத்து அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

உதவும் இதயங்கள் நிறுவனத்தின் இயக்குநர் மயில்வாகனம் சிறிரஞ்சனின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கி/06 கிராம அலுவலகர் பிரிவைச்சேர்ந்த

கோணவில் மத்தி, கோணவில் கிழக்கு, காந்தி கிராமம், யூனியன் குளம், யூனியன் குளம் வடக்கு, யூனியன் குளம் குடியிருப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் உதவும் இதயங்கள் நிறுவனத்தின் மகளிர் அணியினர், செயல்பாட்டாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், ஆசிரியர் பிரேம்காந் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)

## மாவட்டச் செயலருக்கும் 'மாநிலம் பயனுறவாழ்' விருது

முல்லைத்தீவு, மார்ச் 23

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 20 ஆம் திகதி பன்னாட்டு மகளீர் விழா கொழும்பில் நடைபெற்றது.

இந்த விழாவில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரனுக்கு மாநிலம் பயனுற வாழ் மகளிர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

மாதரறம் மாண்புற சோராது செயலாற்றும் செவ்வியத்தைப் பாராட்டி இந்த விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)


## இறம்பைக்குளம் நாகபூசனி தீக்குளிப்பு நேற்றுமுன்தினம்

வவுனியா, மார்ச்.23

வவுனியா இறம்பைக்குளம் நாகபூசனி அம்மன் ஆலய பங்குனி உத்திர திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆலய முதன்மைக் குரு சிவசிறி ஜெயந்திநாதக் குருக்களால் அம்மனுக்கு குளிர்ச்சி அபிசேகமும் சிறப்புப் பூசைகளும், இடம்பெற்றதுடன்.

நகபூசணி அம்மன் சிங்க வாகனம் ஏறி வெளி வீதி சுற்றிவந்ததுடன், தீக்குளிப்பும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)





## குளவிகளால்நிலத்தில்இருந்து பரீட்சை எழுதிய மாணவர்கள்

கிளிநொச்சி, மார்ச் 23

மாணவர்கள் பரீட்சை எழுதும் வகுப்பறையில் இரவோடிரவாக குளவிக் கூடு கட்டியதால் பரீட்சைஎழுதிய மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காக இந்த மண்டபத்தில் தளபாடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எனினும் கிளிநொச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர், மற்றும் ஆசிரியர்களின் முயற்சியால் மாணவர்களுக்கென கணினி அறை ஒன்று பரீட்சை எழுதுமிடமாக ஒழுங்குபடுத்தப்பட்டது. மாணவர்கள் நிலத்தில் இருந்து பரீட்சை எழுதியிருந்தனர்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் குளவிகள் மற்றும் குரங்குகளின் தொல்லைகள் பல காலமாகவே அதிகரித்துள்ளன. கடந்த 2016 ஆம் ஆண்டு படசாலை வளாகத்தில் இருந்த குளவிக்கூடுகளை குரங்குகள் கலைத்ததால் அதிலிருந்து வெளிவந்த குளவிகள் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதற்குச் சென்றிருந்த பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என்று பலரையும் தாக்கியிருந்தன. மாணவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (க-21,6,214)



## முல்லை செயலகத்தில் மகளிருக்கு மதிப்பளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 23

பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் , சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி. திருமதி பூங்கோதை தயாளசீலன் , முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் பெண் முயற்சியாளர்களால் அமைக்கப்பட்ட சந்தையை மாவட்ட செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் திறந்து வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து முல்லைத் தீவு நகரப் பகுதியிலிருந்து மாவட்டச் செயலகம் வரையான நடைபவனியும் இடம்பெற்றது. (க-ரி3)

# மகேந்திரன் விடயத்தில் விக்கிரமசிங்க அசிரத்தை

## சேமசிங்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 23
மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் சந்தேக நபராகக் கருதப்படும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் விவகாரத்தில் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளனர் என்று விசாரணை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வருதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியினரும், தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் குறிப்பிட்டு வந்தனர். அது பொய் என்று தெரிகிறது. இது பற்றிச் சிங்கப்பூர் அரசு முக்கிய செய்தி வெளியிட்டுள்ளது - என்றார்.

(து-61)

# கல்விக் கட்டமைப்பின் உறுதியை பாதுகாக்கச் சேவை நிறுவகம்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு, மார்ச் 23

கல்விக் கட்டமைப்பின் தரத்தின் உறுதியையும் அங்கீகாரத்தையும் பாதுகாப்பதற்கு இலங்கை கல்விக் கண்காணிப்புச் சேவை என்ற பெயரில் சுயாதீன நிறுவகமொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்விக் கட்டமைப்பினுள் ஸ்திரமான அபிவிருத்தியை முன்னெடுத்தல், பாடசாலைகளில் கல்வி மதிப்பீட்டுப் பணிகளை மேம்படுத்தல் மற்றும் பாடசாலை மேற்பார்வை மற்றும் தரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு கல்வி அமைச்சிலுள்ள கல்வித் தரம் மற்றும் முன்னேற்றப் பிரிவுப் பணிகளை விஸ்தரிப்புச் செய்யும் முகமாக கல்விக் கண்காணிப்பு சேவை நடைமுறைப்படுத்துவதுடன், குறித்த சேவையை ஊக்குவிப்பதே இதன் நோக்கம்.

அரச மற்றும் அரச சார்பற்ற பாடசாலைகள், பிரிவெனா, ஆரம்ப பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள், ஆசிரிய மத்தியவள நிலையங்கள், வலயக் கல்வி அலுவலங்கள், மாகாணக்கல்வித்திணைக்களங்கள், பரீட்சைகள் திணைக்களம், கல்விவெளியீட்டுத்திணைக்களம்,தேசியகல்விநிறுவகம் மற்றும்கல்விஅமைச்சு உள்ளிட்ட அனைத்து கல்விப் பிரிவின் தரம் மற்றும் கணக்காய்வுகளைமுன்னெடுக்கும் பொறுப்பு கல்வி கண்காணிப்பு சேவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆணையாளர் நாயகத்தின் நிர்வாகத்தின் கீழ் இதை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ள கண்காணிப்புச் சேவையானது, தேசிய மட்டத்திலான முதன்மைக் காரியாலயம் மற்றும் மாகாண மட்டத்திலான பிரதேச காரியாலயங்கள் ஊடாக இயங்கும் என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (து)

# ஆயுள்வேத மையத்தில் மூன்று பெண்கள் கைது

## விபச்சார விடுதி நடத்தினராம்

ஆயுள்வேதச் சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி இயங்கியது என்ற குற்றச்சாட்டில் அதன் முகாமைமையாளர் உட்பட மூன்று பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். கல்கிஸ்ஸ பொலிஸ்பிரிவுக்குட்பட்ட களுவீதி, ரத்மலானப்பகுதியில் விபச்சார விடுதி இயங்குவதாக கல்கிஸ்ஸ பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்ற அனுமதியுடன் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 46, 29 மற்றும் 40 வயதுடைய ரத்மலானை, பளுகஸ்வாவ, போத்தல மற்றும் பிடிபத்தர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ -71)

# அரசின் நல்ல செயற்பாட்டுக்கு எதிரணியிலிருந்தாலும் ஆதரவு

## எதிர்க் கட்சிகளின் பிரதம கொரடா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23
உதவிகள் வழங்கி நாட்டில் வறுமையை ஒழிக்க முடியாது. எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல்கொடுப்பது போல் அரசின் நல்ல வேலைத்திட்டங்களுக்குஆதரவளிப்போம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவுமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில், நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரம்ப கைத்தொழில் அமைச்சைக் கட்டியெழுப்பும் திறமை அமைச்சருக்கு இருந்தாலும் வரவு -செலவுத் திட்டத்தில் இதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. புதிதாக 6இலட்சம் பேருக்கு சமுர்த்தி உதவி வழங்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சமுர்த்தி நிவாரணம் வழங்கும் திட்டம் சந்திரிகா குமாரணதுங்கவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 14இலட்சம் பேர் சமுர்த்தி உதவி பெறுகின்றனர்.

மேலும் 6இலட்சம்பேருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் உதவி போதுமானதாக இல்லை. - என்றார்.

(து-31)

# அனுமதியற்ற மாணிக்கக் கல் அகழ்வில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 23
இருவேறுபட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 6பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ சென்வீஜென்ஸ்மாவத்தைப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை 6.10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் 33 வயதுடைய பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதுள்ளது.

இதேவேளை பொகவந்தலாவ கொடியாகலைப்பகுதியில் இரவு 11.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அனுமதிப்பத்திரம் இன்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட பொகவந்தலாவ மற்றும் டிக்கோயாப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. அவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்குபயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஹட்டன் நீதிவான்நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-71)

# 'மத்தள'வால் பயனில்லை வருமானமீட்டுவது எப்படி?

## யோசிக்கிறோம் என்றார் அமைச்சர் வஜிர

கொழும்பு, மார்ச் 23
மகிந்த ராஜபக்ச அம்பாந்தோட்டையில் அமைத்த மத்தள வானூர்தி நிலையம் உள்ளிட்ட அனைத்து அமைப்புப் பணிகளும் சவாலை ஏற்படுத்தியுள்ளன. தேவைக்கேற்ப கட்டடங்கள் அமைக்கப்படாமையால் நாட்டின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. அதை வருமானமீட்டும் நிறுவனங்களாக உருவாக்க மாற்று வழிமுறைகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தேசிய கட்டுமானத்துறை சங்கத்தின் புதிய தலைவராக சுசந்த லியனாராச்சி பொறுப்பேற்றதையொட்டிய நிகழ்வொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில்காணப்படும்வானூர்தி சேவைப் பிரிவின் சிக்கல்களால், வெளிநாட்டு பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதற்குப் புதிய வானூர்தி நிலையமொன்றைஅமைப்பதே நிரந்தரத் தீர்வாக அமையும். - என்றார். (து-61)

# எண்ணெய் சுத்திகரிப்பு விடயம் தொடர்பில் ரணில் – விஜயசிறி இடையே நாடாளுமன்றத்தில் சர்ச்சை



கொழும்பு, மார்ச் 23
சிங்கபூர் மற்றும் ஓமன் அரசுக்ள் இணைந்து இலங்கையில் முன்னெடுக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு வேலைத்திட்டம் தொடர்பில் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் காஞ்சன விஜயசிறிக்கும் இடையில் சபையில் வாதப் பிரதிவாதம் நடந்தது. ஓமன் அரசு இலங்கையில் அவ்வாறான எந்த வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை என்ற அறிக்கையை விடுத்துள்ளதாக காஞ்சன தெரிவித்தபோது ஓமன் இதில் பங்குதாரர் இல்லை என்று விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் காஞ்சன விஜயசிறி கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் முன்னெடுக்கவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு வேலைத்திட்டம் குறித்து அரசு தெரிவித்திருந்தது.

சிங்கபூர் மற்றும் ஓமன் அரசுகள் இணைந்து முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டத்தில் ஓமன் அரசு 3.8பில்லியன் முதலீட்டில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாகவும் அதற்காக 400 ஏக்கர் நிலப்பரப்பை ஒதுக்கியாக வேண்டும் எனவும் இலங்கை அரசு கூறியுள்ளது. இந்த வேலைத்திட்டம் குறித்து தாம் எந்த ஒத்துழைப்புகளையும் வழங்கவில்லை என்றும் அந்தநாட்டின் கனியவள அமைச்சின் செயலாளர் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் - என்றார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓமன் அரசு மூலமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையை நானும் பார்த்தேன். இந்த வேலைத்திட்டத்தில் பேச்சு மூலமாக அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறியுள்ளனர். அவர்கள் வெளியிடும் அறிக்கையில் முழுமையான காரணிகளை அவர்கள் கூறுவார்கள் - என்றார்.

(து-31)

# மகிந்த – மைத்திரி அணிகள் இடையே பொதுக் கொள்கை உருவாக்க முயற்சி

கொழும்பு, மார்ச் 23
சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகிய இரு கட்சிகளும் கூட்டணி அமைக்க பொதுவான கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அது தொடர்பில் பேச்சு இடம் பெற்றது. அவற்றை கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்து, கட்சிகளின் மத்திய செயற்குழுவில் ஆராய்ந்து பொதுவான கொள்கைக்கான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கட்சிகளின் இரண்டாம்கட்ட பேச்சு நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நடைபெற்றது. . சந்திப்பின் பின்னர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:

20 விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியிருந்தோம். பல்வேறு விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. கொள்கை உருவாக்க விவரங்களை இரு கட்சிகளினதும் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி, கட்சிகளின் மத்திய செயற்குழுவில் ஆராய்ந்தே இறுதித் தீர்மானத்துக்கு வரவேண்டும் - என்றார். (து-61)

# யாழ்ப்பாணம் - இந்தியா இடையே வானூர்தி சேவை நடத்த வாருங்கள்

## தனியாரை அழைக்கிறார் தலைமை அமைச்சர்

கொழும்பு, மார்ச் 23

யாழ்ப்பாணம் மற்றும் இந்தியா இடையே வானூர்திச் சேவையில் முதலீடு செய்யுமாறு தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனியார் துறையினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில்19ஆம்திகதிநடந்த வணிக மாநாட்டில் தம்மிக பெரேரா என்ற வணிகர், கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வானூர்திகள் இயக்கப்படுவதில்லை என்றும், இது புலம்பெயர் தமிழர்களின் முறைப்பாடு என்றும் கூறியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது உறவுகளைப் பார்க்கச் செல்லும்போது, கட்டுநாயக்கவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வானூர்தியில் செல்ல முடியாதுள்ளது என்று அவர்கள் முறையிடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, "யாழ்ப்பாணத்துக்கோ, இந்தியாவுக்கோ எவராயினும் வானூர்திச் சேவைகளை நடத்த முடியும். அதற்கான கதவுகளை அரசு திறந்தே வைத்திருக்கிறது. தனியார் துறையினர் இதற்கான முயற்சிகளை எடுக்கலாம்" - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான துருக்கித் தூதுவர், "ஐரோப்பாவிலிருந்து கொழும்புக்கு வானூர்தியில் பயணம் செய்ய 10 மணிநேரம் ஆகிறது. ஆனால் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திலிருந்து கல்கிசையில் உள்ள விடுதிக்கு, தரை மார்க்கமாகச் செல்வதற்கு, வெறும் 43 கி.மீ பயணம் செய்வதற்கு ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்கள் தேவைப்படுகிறது.

வானூர்திநிலையத்திலிருந்து கட்டுநாயக்க அருகிலுள்ள பேருந்து நிலையத்துக்குச் செல்வதற்கு உள்ளூர் போக்குவரத்து வசதிகள் இல்லை." என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். யாழ்ப்பாணம்- பலாலி -இந்தியாஇடையேவானூர்திச் சேவை நடத்துவதற்கான பாதை அமைப்பு உள்ளிட்ட பணிகளை அரசு இந்தியாவுடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ளதாகதலைமைஅமைச்சர் முன்னர் கூறியிருந்தார். (த)



## கந்தளாயில் யானை தாக்கி ஒருவர் காயம்

முல்லைத்தீவு,மார்ச் 23

திருகோணமலை கந்தளாய், ஜயந்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காட்டு யானைத் தாக்குதலுக்குள்ளான ஒருவர் காயங்களுடன் கந்தளாய் தள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதுடன், சம்பவத்தில் வான்எல பகுதியைச் சேர்ந்த ஹேரத் நிஸாந்த என்ற 39 வயதுடைய நபரே காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

விறகு எடுப்பதற்காக காட்டுக்குள் சென்றுவர்கள் விறகுகள் எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒளிந்திருந்த காட்டு யானையொன்று இருவரையும் துரத்தித் துரத்தி தாக்கியுள்ளதாக பொலிஸாருக்கு பாதிக்கப்பட்டவரால் வழங்கப்பட்ட வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பிரதேசத்தில் கடந்த வாரமும் காட்டு யானையின் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரியவருவதுடன், ஜயந்திபுர பொலிஸார் காட்டுக்குள் விறகு எடுக்கச் செல்ல வேண்டாம் எனப் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-222)

# உரிய பதில் வழங்க அரசு தவறியுள்ளது

## குற்றஞ்சாட்டுகிறார் மகிந்த

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அரசு உரிய பதில் வழங்கத் தவறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

காலி யக்கலமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு ஒன்றுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வழங்க சம்பந்தப்பட்ட நாட்டுக்கு அதிகாரம் உள்ளது என்று தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கடந்த புதன்கிழமை இலங்கைக்கு பற்றிய தீர்மானம் முன்வைக்கப்பட்டது. (த)

# கிரிபத்கொடவில் சிக்கின போலி நாணயத் தாள்கள்

## சந்தேகநபர்கள் மூவரும் கைது

கொழும்பு, மார்ச் 23

போலிநாணயத்தாள்களை வைத்திருந்தனர் என்று குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபத்கொடவில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போது அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து போலியான ஆயிரம் ரூபா தாள்கள் 5, 500 ரூபா தாள்கள் 3 கைப்பற்றப்பட்டன.

குறித்த வீட்டில் சோதனை நடத்தியபோது, ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் 27, 500 ரூபா நாணயத் தாள்கள் 4 மீட்கப்பட்டன.

உடன் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதி அச்சிடப்பட நிலையிலிருந்த 1000 ரூபா நாணயத்தாள்கள் 2, 500 ரூபா நாணயத்தாள்கள் போலி நாணயத் தாள்களை அச்சிடும் இயந்திரம், உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

களனிப் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் மஹர நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-71)

# ஐ.தே.கவுடன் இணையும் எண்ணம் எதுவுமில்லை

## சு.கவின் துமிந்த எம்.பி. தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளும் எண்ணம் இல்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நொச்சியாகமையில் அண்மையில் நடந்த நிகழ்வு ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் தனிப்பட்ட உறவுகள் எதுவும் இல்லை. 2015ஆம் ஆண்டு தேசிய அரசு அமைக்கப்பட்டதன் காரணமாகவே இரண்டுகட்சிகளும் இணைந்து செயற்பட்டன. இந்தநிலையில் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவை அரசதலைவராக்கும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இதுவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் எதிர்ப்பார்ப்பு என்று தெரிவித்தார். (த)



"கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பெருமளவு மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இவர்களுக்கு உதவ 14 சங்கங்கள் உள்ளன.ஒற்றைக்காலில் நின்றாலும் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்ற மனவலிமையுடன் உழைத்து வாழத்துடிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசும் அமைச்சும் சிறப்புத் திட்டங்களை அறிவிப்பதுடன், அவர்களுக்காக இயங்கும் சங்கங்களுக்கும் உதவிகளை வழங்க வேண்டும்.

# கிழக்கில் சமுர்த்தி உதவியில் தேவையற்றவர்கள் இணைப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் சமுர்த்தி உதவி பெறத் தகுதி உள்ளவர்கள் இருந்தும் தகுதியில்லாதவர்களுக்கும் சமுர்த்தி அதிகளவில் வழங்கப்பட்டிருகின்றது என தமிழ்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் ஆரம்ப கைத்தொழில் சமூகவலுவூட்டல் அமைச்சு, பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு மற்றும் சிறப்பு பிரதேசங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடுதொடர்பானகுழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் பெருமளவு மாற்றுத்திறனாளிகள் உள்ளனர்: இவர்களுக்கு உதவ 14 சங்கங்கள் உள்ளன.ஒற்றைக்காலில் நின்றாலும் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்ற மனவலிமையுடன்உழைத்து வாழத் துடிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசும் அமைச்சும் சிறப்புத் திட்டங்களை அறிவிப்பதுடன், அவர்களுக்காக இயங்கும் சங்கங்களுக்கும் உதவிகளைவழங்கவேண்டும். அத்துடன் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதுடன்பண்ணைகளைஅமைக்கவும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவும் அவர்களுக்கு உதவ வேண்டும்.

நகரங்களில் 30 வீத மக்களும் கிராமங்களில் 70 வீத மக்களும் வாழ்கின்றனர். -அபிவிருத்திப்பணிகளில்கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சமுர்த்தி உதவிபெறத்தகுதிஉள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். என்றாலும் தகுதியில்லாதவர்களுக்கும் அதிகளவில்வழங்கப்பட்டிருகின்றது. இதுதொடர்பாகவிடயத்துக்கு பொறுப்பானவர்கள் கவனம் செலுத்தி உதவி வழங்கப்பட வேண்டியவர்களை இனம் காண நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை சிறப்பு பிரதேசங்கள் அபிவிருத்தி பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கானஅமைச்சராக இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார் - என்றுமேலும் தெரிவித்தார். (க -31)

# பட்டுப்பாதை திட்டம் தோல்வி!

## அதிக வட்டிக்கு பணம் என்றும் கூறுகிறது தேசிய பாதுகாப்புக்கான ஆய்வு நிறுவனம்

கொழும்பு, மார்ச் 23

சீனாவின் ஒரு மண்டலம் ஒரு பாதை (நவீன பட்டுப் பாதைத் திட்டம்) திட்டத்தின் கீழ் தோல்வியடைந்த செயற்றிட்டமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் மாறியிருக்கின்றது என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின்கீழ்நிறுவப்பட்ட தேசிய பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

இலங்கை மீது எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் அது முதலீடுகளில் இருந்துபலன்கள் எவற்றையும் தருவதற்கு தவறியமையே என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதற்கட்டஅமைப்புக்குச் சீனாவிடமிருந்து இலங்கை 30 கோடி 70 இலட்சம் டொலர்களை வருடாந்தம் 6.3 சதவீத வர்த்தக வட்டிக்குக் கடன்பட்டது என்று நிறுவனத்தின் ஆராய்ச்சி உதவியாளர் சனோஜ் ஜெயக்கொடி தெரிவித்தார்.

**கொள்ளை வட்டி**

இதுகடன்ஒப்பீட்டளவில்மிக உயர்ந்த சதவீதத்துக்குப் பெறப்பட்டது.

பெரும்பாலான அபிவிருத்தி வங்கிகள் கடன்களைசுமார் 2-3வீத வட்டிக்கு அல்லது அதை விடவும் குறைந்த வட்டிக்குக் கொடுக்கின்றன. அதனுடன் ஒப்பிடுகையில் சீனாவுக்கு வழங்குவதற்கு இலங்கை ஏற்றுக்கொண்ட வட்டி மிக அதிகம் - என்று மேலும் தெரிவித்தார்.

(த-61)

கண்டிக் கலவரத்தில் முஸ்லிம்களுக்கு

## நீதி கிடைக்காமைக்கு இனவாதமே காரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கண்டிக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நீதி கிடைக்காமைக்கும் இனவாதமே காரணம். அது பற்றிய விசாரணைஅறிக்கை இதுவரையிலும் வெளியிடப்படவில்லை என்று ஐ.நாவில் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது அமர்வு அண்மையில் இடம்பெற்றபோது பொது விவாதத்தில் இவ்வாறு தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த இனவாத வன்முறைகளை விசாரிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த மே மாதம் விசாரணை நடத்தியிருந்தது. அந்த வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஆணைக்குழுவில் முற்பட்டு தம் கண்களால் கண்டவற்றைச் சாட்சியமாக வழங்கியிருந்தனர். அந்த விசாரணை முடிவில் விசாரனை அறிக்கை ஜூலை மாதம் வெளியிடப்படும் விசாரணைக் குழுவின் ஆணையாளர்கள் தெரிவித்திருந்தனர். 10 மாதங்கள் ஆனபோதும் அந்த விசாரணை அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை. - என்று கூறியுள்ளார். (த)

சுயநிர்ணய உரிமையை

# குறியீட்டுப் பொருளாக நோக்கின் போராடுவோர் பாதிக்கப்படுவர்

### கஜேந்திரகுமார் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

**சுயநிர்ணய உரிமையை வெறுமனே ஒரு குறியீட்டுப் பொருளாக மட்டும் ஐக்கிய நாடுகளும் இந்த அவையும் தொடர்ந்தும் அணுகுமேயானால், சுயநிர்ணய உரிமைக்காக உண்மையில் போராடிக்கொண்டிருக்கின்ற அனைவரும் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுவார்கள்.**

இவ்வாறு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது அமர்வு கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றபோது பொது விவாதத்தில் இவ்வாறு தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு நிற்கும் தமிழ்த் தேசமானது ஒருபோதும் பாரதீனப்படுத்தப்பட முடியாத தமது சுயநிர்ணய உரிமையை அடைவதற்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறது.

இலங்கை அரசு வன்முறையைக் கையிலெடுத்தபோது அதற்கான எதிர்வினையாக தமிழர் தரப்பும் ஆயுதங்களைக் கையில் எடுக்க நேர்ந்தது.

தமிழ்விடுதலைஅமைப்பை மட்டுமின்றி, தனது பார்வையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்கள் எனக் கருதப்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் என அனைவரையும் இலங்கை அரசு தனது இலக்காகக் கருதியது.

இப்படியானவர்களுள் ஊடக அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக தொழிலாளர்கள் ஆகியோரே பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். போர் நடந்த காலப்பகுதியில் இலங்கையில் கொல்லப்பட்ட 48 ஊடகவியலாளர்களுள் 41பேர் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள். தமிழர்கள் அல்லாத ஏனைய அந்த 7 ஊடகவியலாளர்களில் ஆகக் குறைந்தது இரு ஊடகவியலாளர்கள், தமிழர்கள் மீதான அரச ஒடுக்குமுறையை வெளிப்படுத்திய மைக்காக அரசால் கொல்லப்பட்டவர்கள்.

தமிழ்த்தந்தி எனப்படும் ஊடக நிறுவனம் இலங்கை அரசின் ஆகப்பிந்திய இலக்காக அமைந்தது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய மாவீரர் ஒருவர் பற்றிய கட்டுரை ஒன்றை பிரசுரித்தமைக்காக அவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் அச்சுறுத்தப்பட்டதோடு சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று இந்தச் சபைக்கு இலங்கை அரசு உறுதியளித்துள்ள நிலைமையிலும்கூட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் இந்த நடவடிக்கை இடம்பெற்றிருக்கின்றது என்று கூறியுள்ளார். (த)

## போராட்டத்தைச் சிதைக்க சூத்திரதாரிகள் முயற்சி

*அமைச்சர் ரிஷாட் கூறுகிறார்*



கொழும்பு, மார்ச் 23

அறுவைக்காட்டு குப்பை கொட்டுவதற்கு எதிராக இடம்பெறும் புத்தளம் மக்களின் நியாயமான போராட்டத்தை மழுங்கடித்து, திசை திருப்பும் வகையில் சூத்திரதாரிகள் சிலர் செயற்பட்டு வருகின்றனர் என்று அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கலைவாதி கலீலின் பவள விழாவும் "என் வில்பத்து டயரி" நூல் வெளியீடும் கொழும்பு அல்ஹிக்மா கல்லூரியில், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். (த)



## சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்தது

*அரசதலைவர் இப்படிக் கூறுகிறார்*

கொழும்பு, மார்ச் 23

சிறுநீரக நோய்த்தடுப்புக்குக் கடந்த 4 வருடங்களாக முக்கியத்துவமளித்து மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களால் நாடு முழுவதிலுமுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய சிறுநீரக நிதியத்தின் 437 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அநுராதபுரம் பொது மருத்துவமனையுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர் பராமரிப்பு, நலன்பேணல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன திறந்துவைத்தார்.

இது இலங்கையில் அமைக்கப்பட்ட இரண்டாவது சிறுநீரக நோயாளர் பராமரிப்பு, நலன்பேணல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



## இலக்குகளை அடைவதை வலியுறுத்தும் தமிழ்ப் பாடல்

### கொழும்பில் வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 23

இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவு மையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைவதை வலியுறுத்தும் தமிழ் மொழியிலான பாடல் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இளைஞர் சபை இந்த முயற்சியில் ஈடுபட்டது. தமிழ்மொழியிலான இந்தப் பாடல் கொழும்புப் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் கடந்த 20 திகதி வெளியிடப்பட்டது.

சபையின் நிதிப் பொறுப்பாளர் சி.ஜனார்த்தனனின் முயற்சியில் ஏ.இளமுருகன் உருவாக்கி இசையமைத்துப் பாடியுள்ளார். (த-9)

# மக்கள் கோரிக்கைகளை ஐ.நா. கவனத்தில் எடுக்க வேண்டும்

### முன்னாள் முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

எமது மக்களின் கோரிக்கைகளை ஐ. நா மற்றும் பன்னாட்டுச் சமூகம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சில தினங்களுக்கு முன்னர் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த விக்னேஸ்வரனிடம், ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது செய்திப் பிரிவு அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது மக்கள் பல்வேறு ஏமாற்றுக்கள், ஏமாற்றங்கள், சூழ்ச்சிகள், அடக்குமுறைகள், உதாசீனங்கள், அவமானங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் ஓர்மத்துடன் வடக்கு - கிழக்கில் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான போராட்டங்களையும் அவர்களின் கோரிக்கைகளையும் ஐ.நா. பன்னாடுகள் மற்றும் இலங்கை அரசு ஆகியவை அலட்சியம் செய்துவிடக்கக்கூடாது.

படித்த மக்கள் முதல் பாமர மக்கள் வரை எல்லோரும் ஒன்றாக இணைந்து தாமாகவே இந்தப் போராட்டங்களை எந்த அரசியல் கட்சிகளினதும் பின்னணி எதுவும் இன்றி மேற்கொண்டு வருவதன் தாற்பரியத்தை அலட்சியம் செய்யாமல் அதனைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யவேண்டும். - என்றுள்ளது. (த)

# மைத்திரிக்கு அரசு மசிய மறுகின்றது

### மகிந்த சாடல்



கொழும்பு, மார்ச் 23

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்களை அரசு புறக்கணிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

அவிசாவளை தல்துவப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'எமது ஆட்சிக் காலத்தில் வரிகள் அறவிடப்பட்டதாக தெரிவித்து, அதனை விட 2 மடங்குகள் அதிகமான வரிகளை தற்போதைய அரசு அறவிடுகின்றது. நெடுஞ்சாலைகள் அமைப்பு விடயத்தில், அரசதலைவர் தெரிவித்த கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதுவரை அரசு ஆட்சி செய்த நாள்களில் பழிவாங்கல்களுக்குச் செலவழித்த காலமே அதிகம்' என்றும் மகிந்த கூறியுள்ளார். (ஓ.5)

# இந்து சமுத்திரத்தின் முத்து கண்ணீர்த் துளி ஆகிவிட்டது

*மாகாணத் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, மார்ச் 23

'இந்து சமுத்திரத்தின் முத்து', என்றழைக்கப்பட்ட நாடு, துரதிஷ்டவசமாக 30 வருடங்கள் போரின் விளைவாக 'இந்து சமுத்திரத்தின் கண்ணீர்த் துளி' என்று அழைக்கப்படலாயிற்று.

இவ்வாறு கிழக்கு மாகாணத் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஆர். ஞானசேகர் தெரிவித்தார்.

கடந்த 9 வருடங்களில் சுமார் 9 மில்லியன் உள்நாட்டு உல்லாசப் பயணிகள் கிழக்கு மாகாணத்துக்கு வந்துள்ளனர். 2020 ஆம் ஆண்டு 45 இலட்சம் வெளிநாட்டினர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

கடந்த ஆண்டு 23 இலட்சம் உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வந்து 4 பில்லியன் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளார்கள் - என்றார். (த)

# நாகபூசனி ஆலயத்தின் காணி விடயத்தில் அதிகாரிகள் பல்டி

## தவறுதலாகக் கடிதம் அனுப்பப்பட்டு விட்டது என்றும் சமாளிப்பு

வவுனியா, மார்ச் 23

வவுனியா, மூனாமடு நாகபூசனி அம்மன் ஆலயக் காணியை கையகப்படுத்துவது தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம் தவறுதலாக அனுப்பப்பட்டுவிட்டது என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மூனாமடு நாகபூசனி அம்மன் ஆலயக் காணியை அபகரித்து பௌத்த மதத்தலம் அமைக்க முயற்சிக்கப்படு கின்றது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மூனாமடு மற்றும் பேயாடிக்கூழாங்குளம் ஆகிய இடங்களில் தமிழ் மக்கள் தொன்றுதொட்டு விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தமது வயல் நிலங்களுக்கு அருகே ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்ததுடன், இளைப்பாறுமிடம் என்பவற்றையும் அமைத்திருந்தனர்.

மூனாமடுவில் அமைந்திருந்த நாகபூசனி அம்மன் ஆலயம் நீண்டகாலமாகத் தமிழ் மக்களால் பேணப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்தப் பகுதியை இலங்கை இராணுவம் கையகப்படுத்தியது. அவர்களால் அமைக்கப்பட்ட முகாமில் வழிபாட்டுக்காக புத்தர் சிலை ஒன்றையும் அவர்கள் நிறுவியிருந்தனர். பின்னர் அந்தக் காணிகள் மக்கள் பயன்பாட்டுக்காக விடுவிக்கப்பட்டபோதும், அங்கு நிறுவப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படவில்லை. தற்போது வவுனியாவில் உள்ள பிக்கு ஒருவர் அந்தப் பகுதியைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், அந்தக் காணி இந்து ஆலயம் அமைந்துள்ள பகுதி. அந்தக் காணி நாகபூசனி அம்மன் ஆலயக் காணி என்று பிரதேச செயலகமும் கூறியுள்ளது. அதற்கான ஆதாரங்களும் உள்ளன. அதை வேறு எவரும் உரிமை கோரவோ, கையகப்படுத்தவோ அனுமதிக்க முடியாது என்று கூறியிருந்தது.

வடக்கில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ள காணிகளில் பெரும்பாலானவை தனியார் காணிகளே. புத்தர் சிலையை அனைத்து இடங்களிலும் நிறுவி அந்த இடங்களைச் சொந்தம் கொண்டாட நினைப்பது நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும். புத்த பெருமானின் போதனைகளை ஏற்று நடக்கும் எவரும் இவ்வாறான காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

அந்த இடத்தில் நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றி, தமிழ் மக்கள் பூர்வீகமாக மேற்கொண்டுவரும் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்றும் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது இந்தப் பின்னணியில் இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று மாலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலர், பிரதேச செயலர், சர்வமத குருமார்கள், போயாடிக் கூழாங்கும் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், நாகபூசனி அம்மன் ஆலய நிர்வாகத்தினர், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

மாவட்டசெயலகத்தால் அனுப்பட்ட கடிதம் தவறுதலாக அனுப்பட்டு விட்ட்து என்றும், அந்த விகாரை அமைந்துள்ள காணியை யாரும் உரிமை கோரவில்லை என்றும் முன்னர் போலவே வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்த மாவட்டச் செயலர், கடிதம் தொடர்பாக மன்னிப்புக் கோருகின்றேன் என்றும் தெரிவித்தார் என கலந்துரையாடலில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

பூர்வீகக் காணியைக் கையகப்படுத்துவது தொடர்பாகக் கடிதம் அனுப்பி விட்டு அது தவறுதலாக அனுப்பப்பட்டுள்ளது என்று சாதாரணமாகக் கூறப்பட்டுள்ளமை விசனத்தை ஏற்படுத்துகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (எ-110)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரம் விரைவில் வெளியாகும்

## ஜெனிவாவில் கூறினார் ஆளுநர்

கொழும்பு, மார்ச் 23

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரைவில் வெளியிடுவார் என்று வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜெனிவாவில் வைத்து செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மனிதாபிமான நாகரிக பிரச்சினை. இதிலிருந்து ஒருபோதும் நகர்ந்து செல்ல முடியாது என்று அரச தலைவருக்குத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் தேவைகளுக்கு செவிமடுக்க வேண்டியது அவசியமாகும். ஐந்து மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகங்களை நிறுவுவது அவசியமாகும்' என்றார் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன். (ஒ.5)

# கட்டுத்துவக்கில் அகப்பட்டு குடும்பத் தலைவர் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 23

முல்லைத்தீவு கோடாலிக்கல்லு 11 ஆம் கட்டை காட்டுப் பகுதியில் தடி வெட்டச் சென்ற குடும்பத் தலைவர் கட்டுத்துவக்கில் அகப்பட்டுபடுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை 3ஆம் வாட்டாரத்தைச் சேர்ந்த 52 அகவையுடைய வி.விசயகரன் என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். (ஒ.5,ரி3)

# இலங்கைக்கு தொடர்ந்து சலுகை வழங்குவோம்

## பிரிட்டன் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 23

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னரும், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்ந்து வழங்கப்படும் என்று, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

'ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறினாலும், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை உள்ளிட்ட தீர்வை விலக்குகள் அளிக்கப்படும். அமெரிக்காவுக்கு அடுத்ததாக, இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையில் இரண்டாவது மிகப் பெரிய நாடாக பிரிட்டனே இருக்கிறது' என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

## அல்லைப்பிட்டி...

வற்றுறை முதன்மை வீதியில், அல்லைப்பிட்டிக்கு அண்மையாக நேற்று மாலை, டிப்பரும் உந்துருளியும் மோதியதில் உந்துருளியில் பயணித்த நிதர்சன் உயிரிழந்ததாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வேலணை நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளியும், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பரும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகவும், டிப்பர் சாரதி தப்பிச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாகவும் ஊர்காவற்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,26)

## யாழிலிருந்து...

பாணத்திலிருந்து 40பேர் பயணமாகவுள்ளனர். மருத்துவர்கள், மதகுருமார், வர்த்தகர்கள் என்று பல தரப்பினரையும் உள்ளடக்கிய 40பேர் கொண்ட குழு செல்லவுள்ளது. இதற்கான முயற்சிகள் இரகசியமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஒ.5,105)

## நீதிமன்றில்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா நீதிமன்றிற்கு வழக்கு நடவடிக்கைகளுக்காகச் சென்ற நபர் நீதிமன்றின் நடவடிக்கைகளுக்கு குழப்பத்தை விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவருக்கு ஆறுமாதம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற சிறைக்கூண்டுக்குள் பொலிஸாரால் அவர் அடைக்கப்பட்டார். கழுத்து அறுக்கப்பட்ட நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவர் தனது பையிலிருந்து பிளேட்டால் கழுத்தை அறுத்துக் கொண்டார் என்று தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ.5,110)

## பன்னாட்டுக்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்தொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மீண்டும் ஒரு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளது. அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. 2015ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு அமைவாக அல்லது அதனை ஒத்த தீர்மானமே தற்போதும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த முறையும் இணை அனுசரணை வழங்கியதன் ஊடாக மூன்று தடவைகள் இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள, பொறுப்புக்கூறல், பன்னாட்டு விதிமுறைக்கு அமைவான மனித உரிமையை பாதுகாக்கும் நகர்வுகள், சுயாதீனமான நீதிச் செயற்பாடு, நம்பத்தக்க நீதிப்பொறிமுறையின் சுயாதீன செயற்பாடு, பாராபட்சமற்ற நகர்வுகள் என்ற முக்கியமான விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டன.

**வெளிநாட்டு நீதிபதிகள்**

வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கல் என்ற விடயத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டே மூன்று தீர்மானங்களுக்கும் இணை அனுசரணை வழங்கியது. இதற்கு இணங்க மாட்டோம் என்று அரசு கூற முடியாது. மூன்று தடவைகளும் வாக்குறுதிகளை வழங்கி கைச்சாத்திடப்பட்ட இணை அனுசரணையை நிராகரிக்க முடியாது.

அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச தரப்பு அவ்வப்போது வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்று கூறுகின்றனர். அது பொய்யான கருத்தாகும். மூன்று தடவைகள் வெளிநாட்டு நீதிப்பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்து கைச்சாத்திட்டு தீர்மானத்தை நிராகரிக்க முடியாது.

2015 ஆம் ஆண்டு அப்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஜெனிவா வந்தார். அவரும் வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கை அரசமைப்புக்கு அமைய உள்வாங்க முடியாது என்று கூறினார். 2013 ஆம் ஆண்டு வேறொரு சந்தர்ப்பத்தில் முன்னாள் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க விவகாரத்தில் இதே சபையில் வெளிநாட்டு நீதிபதிகளை கொண்டு சுயாதீன விசாரணைகளை நடத்த முடியும் என்று விஜயதாசவே கூறியிருந்தார். தனிநபர் தீர்மானத்தைக் கொண்டுவந்து இந்த விடயத்தில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்க முடியும் என கூறினார். அரசமைப்பின் 111 ஆம் பிரிவில் வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து அனுமதி உள்ளது. சில உதாரணங்களும் உள்ளன. குறிப்பாக விக்டர் ஐவன் எதிர் சரத் சில்வா வழக்கு உள்ளது. உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படலம் என்ற கோட்பாடு உள்ளது.

**மேற்பார்வை நீடிப்பு**

இப்போது 40/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசு இழுத்தடிப்பதன் காரணமாககால அவகாசம் கொடுக்கப்படுவதாக கூறப்படுகின்றது. பன்னாட்டு மேற்பார்வையை நீடிகின்றதாக இந்த தீர்மானம் அமைந்துள்ளது. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய ஒரு நீதிமன்ற பொறிமுறைக்கு இணங்குகின்றோம் என்று மூன்றாவது தடவையாகவும் உறுதியளித்துள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சர் ஜெனிவாவில் தீர்மானத்தை எதிர்ப்பதாகக் கூறிவிட்டு அதே தீர்மானத்துக்கு கைச்சாத்திட்டுள்ளார். இப்போதாவது சுயாதீனமான விசாரணைகளை நடத்தி உண்மைகளைக் கண்டறியாது போனால் நாம் தமிழர் தரப்பு என்ற ரீதியில் பன்னாட்டுப் பொறிமுறையை நாடுவோம். எமக்கு இதனை தவிர மாற்று வழிமுறை இல்லை. இலங்கை அரசு வெளிநாட்டு நீதிபதிகளை இணைத்துக்கொண்டு சுயாதீனமான விசாரணைகளை நடத்த வேண்டும். கலப்பு முறைமை ஒன்றை உருவாக்க வேண்டும். இல்லையேல் நாம் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவோம்.

சுயாதீன விசாரணை என்றால் இராணுவம் ஒருபுறமும் அரசு மறுபுறமும் இருந்து விசாரணை நடத்தினாலும் இறுதியாக இரண்டு தரப்பும் ஒரே தரப்பாகவே அமையும். ஆகவே இதில் நடுநிலையான சுயாதீன செயற்பாடாக எதுவுமே அமையாது. ஆகவேதான் நாம் வெளிநாட்டு நீதிபதிகளை கேட்கின்றோம். அதுவே சுயாதீனமாக அமையும். அதனை இலங்கை அரசு செய்யாதவிடத்து மீண்டும் நாம் பன்னாட்டுத் தரப்பை நாடுவோம். தமிழ் மக்களின் நிலைப்பாடும் இதுவாகே உள்ளது. அவர்களுக்கு வெளிநாட்டு நீதிபதிகள் மீதே நம்பிக்கை உள்ளது. அதனை நிராகரிக்க வேண்டாம் - என்றார். (ஒ.5.22.31)

## காணி...

எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக மக்கள் நேற்றுத் திரண்டனர்.

வலி.வடக்கில் 232 ஏக்கர் காணி, கடற்படைத் தளம் அமைக்கவும், சுற்றுலா அதிகார சபைக்கும் சுவீகரிக்க திட்டமிடப்பட்டிருந் தது. இதற்கான அறிவித்தல் நிலஅளவைத் திணைக்களத்தால் மக்களுக்குத் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. இருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா தலையிட்டு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, காணி அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தார். இதனையடுத்து நேற்றைய அளவீட்டு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், தமது காணிகளை பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்க முடியாது என்று தெரிவித்து காணி உரிமையாளர்கள் கீரிமலையில் நேற்றுக் காலை 7 மணிக்குத் திரண்டனர்.

'காணி சுவீகரிப்பை அனுமதிக்க முடியாது. மயானங்களை மடக்கி வைத்திருக்கின்றார்கள். பருத்தித்துறை பொன்னாலை வீதியையும் முழுமையாக விடுவிக்கின்றார்கள் இல்லை' என்று மக்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, மக்களுடன் வந்து கலந்துரையாடினார். காணி சுவீகரிப்பு இன்று முன்னெடுக்கப்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உறுதிமொழி வழங்கியதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (ஒ.5,26)

## வறட்சியால்...

வித்துள்ளது.

'பகல் வேளையில் மூன்று மணிநேரமும் இரவு வேளை ஒரு மணி நேரமும் நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். லக்ஸ்பான, மேல் கொத்மலை நீர் உற்பத்தி நிலையங்கள் உள்ள பகுதிகளில் மழைவீழ்ச்சி போதுமானதாக இல்லை என்பதால் நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பநிலையுடனான காலநிலையால் ஏற்பட்ட அதிகரித்த மின்பாவனையை ஈடு செய்ய முடியாதுள்ளது' என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.5)



## முகநூலில் பாதுகாப்பு குறைபாடு

நியூயோர்க்,மார்ச் 23
மில்லியன் கணக்கான முகநூல் பயனர்களின் கடவுச் சொல்களை அந்த நிறுவனத்தில் பணியாற்றும் 20ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்களால் மிகச் சுலபமாக அணுக முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது..இவ்வாறு முகநூல் நிறுவனத்திலுள்ள பாதுகாப்புக் குறைப்பாட்டை, பாதுகாப்பு வல்லுநர் பிரையன் கிரெப்ஸ்தான் என்பவர் சுட்டிக்காட்டினார். முகநூலைப் பயன்படுத்தும் 600 மில்லியன் பயனர்களின் கடவுச்சொல்கள் சாதாரண எழுத்து வடிவில் சேகரிக்கப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறு நடந்து வருவதாகப் பிரையன் மேலும் தெரிவித்தார். இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள முகநூல் நிறுவனம், தங்கள் நிறுவனத்தில் நிலவிய குறித்த வகைக் கோளாறைச் சரி செய்து விட்டதாகத் தெரிவித்தது.

## மகிழ்ச்சியான நாடுகளில் பின்லாந்துக்கு முதலிடம்

நியூயோர்க்,மார்ச் 23
ஐக்கிய நாடுகள் சபை உலகிலே மிக மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலைக் கடந்த புதன்கிழமை வெளியிட்டது. இதில் பின்லாந்துக்கு முதலிடம் கிடைத் துள்ளது. வருமானம், சுதந்திரம், நம்பிக்கை, ஆரோக்கியமான வாழ்க்கை, சமூக ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் தரப்படுத்தல் அமைந்துள்ளது.
பின்லாந்தைத் தொடர்ந்து டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, சுவீடன், நியூஸிலாந்து, கனடா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் உள்ளன. மகிழ்ச்சி இல்லாத நாடுகளின் பட்டியலில் தென் சூடான், மத்திய ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன.

## 'கூகுளு'க்கு தண்டம்

பிரசல்ஸ்,மார்ச்.22
அமெரிக்காவைச் சேர்ந்த இணையத்தள ஜாம்பவானான 'கூகுள்' நிறுவனத்துக்கு ஐரோப்பிய யூனியன் சார்பில் 30ஆயிரத்து 168கோடி தண்டம் விதிக்கப்பட்டது. ஒப்பந்த விதிகளை மீறியதற்காக இந்த தண்டம் விதிக்கப்படுவதாகக் கூறப்பட்டது. கூகுள் நிறுவனம் இணைய வர்த்தகச் சந்தையில் தனது ஆதிக்கத்தைத் தவறாகப் பயன்படுத்தி தனது போட்டியாளர்கள் தேடுகின்ற விளம்பரங்கள் வெளியிடுவதை தடுத்துள்ளது. கூகுள் வர்த்தகரீதியாக மிகவும் முக்கிய விளம்பரதாரர்களுக்கு மட்டுமே தேடு விளம்பரங்கள் வெளியிடத் தனிப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் அனுமதி வழங்கியுள்ளது. கூகுள் தனது போட்டியாளர்களின் இணையதளங்களில் தேடு விளம்பரங்கள் வெளியிடுவதை தடுத்துள்ளது.
பின்னர் அவர்களிடம் கூகுளில் குறைந்த எண்ணிக்கையில் விளம்பரங்கள் வெளியிட மிகவும் லாபகரமான இடம் ஒதுக்குவதற்கு முன்பதிவு செய்யும்படி வலியுறுத்தியுள்ளது.
அதோடு தனது போட்டி இணையதளங்களில் ஏதாவது தேடு விளம்பரங்கள் வெளியானால், மாற்றம் செய்வதற்கு முன்பு கூகுளிடம் எழுத்து மூலம் அனுமதி பெறவேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது என்று கூகுளின் செயற்பாட்டுத் தவறுகள் பல சுட்டிக்காட்டப்பட்டே குறிப்பிட்ட தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் படகு கவிழ்ந்து 100 பேர் அவலச் சாவு

### கொண்டாட்டத்துக்கு இடையே சோகம்





பக்தாத்,மார்ச் 23
ஈராக்கின் மொசூல் நகருக்கு அருகேயுள்ள 'ரைகர்' எனப்படும் ஆற்றில் மூழ்கி கிட்டத்தட்ட 100பேர் சாவடைந்தனர். 200பேர் வரையில் பயணித்த படகு குறித்த ஆற்றில் மூழ்கியதாலேயே இந்தச் சாவுகள் சம்பவித்தன. ஆனாலும் சாவுகள் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஈராக்கில் குர்திஷ் இன மக்கள் தங்கள் புத்தாண்டை வெகு விமரிசையாகக் கொண்டாடினர்.
இந்த நிலையில் புத்தாண்டைக் கொண்டாடிய ஒரு தொகை மக்கள் மொசூல் நகர் அருகே உள்ள 'ரைகர்' ஆற்றைப் படகு ஒன்றில் கடந்து சென்றனர். அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிக் கொண்டதால் அந்தப் படகு ஆற்றின் இடைநடுவில் கவிழ்ந்தது. அதில் பயணித்தவர்கள் நீரில் மூழ்கி இறந்தனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். ஆற்றில் மூழ்கி இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பெரும் நில அதிர்வுடன்

# வெடித்தது இரசாயனக் கிடங்கு சீனாவில் 47பேர் பரிதாபச் சாவு



பீஜிங்,மார்ச் 23
சீனாவின் வடபிராந்தியமான ஷாங்காய் நகரத்தின் யான்செங் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை இரசாயனத் தொழிற்சலையின் இரசாயனச் சேமிப்புக் கிடங்கு ஒன்று வெடித்துச் சிதறியது. பயிர்களுக்கான பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் இரசாயன உரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையிலேயே இந்த வெடி விபத்து நடந்தது.
இந்த வெடி விபத்தால் ஏற்பட்ட தீயால் 47 பேர் சாவடைந்தனர். நூற்றுக்கு அதிகமானவர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பாடசாலைச்சிறுவர்களும், குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.
பயங்கரச் சத்தத்துடன் ஏற்பட்ட வெடிப்பாலும், தொடர்ந்து பரவிய தீயாலும் அருகிலுள்ள வீடுகளின் கதவு, ஜன்னல்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிவிபத்தால், அந்தப் பகுதியில் 2.2 ரிக்டர் அளவுக்குச் சமமான நில அதிர்வு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 2015ஆம் ஆண்டு சீனாவில் தியாஜின் வேதி தொழிற்சாலையில் ஏற்பட்ட தொடர் வெடி விபத்தில் 165 பேர் சாவடைந்திருந்தமையும், கடந்த ஆண்டு சீனாவில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட இரசாயன வாயு வெளியேற்றத்தால் 23 பேர் சாவடைந்திருந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.





## எவரெஸ்ட் சிகரத்தில் சடலங்கள் பனி உருகுவதால் வெளித் தெரிகின்றன

எவரெஸ்ட் மலையில் உள்ள பனிப்பாறைகள் உருகிவருவதால், அதில் ஏறி இறந்தவர்களின் பனியில் புதைந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருவதாக எவரெஸ்ட் சிகரப் பயண ஏற்பாட்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். அங்கு பல வருடங்களுக்கு முன்பு சாவடைந்தவர்களின் உடல்கள் பனியில் புதைந்திருந்தன. புவி வெப்பமயமாதல் காரணமாகப் பனிப்பாறைகள் வேகமாக உருகுகின்றன.
இப்போது அவை தென்பட ஆரம்பித்துள்ளன என்கின்றனர் இயற்கை ஆய்வாளர்கள். எவரெஸ்ட் மலையில் ஏறுவதற்கு முயற்சி செய்தவர்கள் 300 பேர் வரையில் அங்கு சாவடைந்துள்ளனர். அவர்களில் பலரின் உடல்கள் மீட்கப்படாத நிலையில் அவை எவரெஸ்ட் சிகரத்தில் எந்நேரமும் படிந்துள்ள பனியில் புதைந்திருப்பதாக நம்பப்படுகிறது. சீனப் பகுதியைச் சார்ந்த எவரெஸ்ட்டின் பக்கத்தில் இருந்து சில உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் இதுவரை 4ஆயிரத்து 800க்கும் மேற்பட்டோர் ஏறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தேர்தல் களம்

# ‘காவலர்’ கோஷத்தை மோடி கைவிட வேண்டும்

சத்ருகன் சின்கா தெரிவிப்பு

புதுடெல்லி,மார்ச் 23
‘நானும் காவலர்’ கோஷத்தை மோடி கைவிட வேண்டும் என்று பா.ஜனதா நாடாளுமன்ற உறுப்பினரும் நடிகருமான சத்ருகன் சின்கா கூறினார். ரபேல் விவகாரத்தில் ‘நாட்டின் காவலர்’ என்று தன்னைக் கூறிக் கொண்ட மோடி அரசு பணத்தைக் களவாடித் தொழில் அதிபர் அனில் அம்பானிக்கு அளித்து விட்டதாகக் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பரப்புரை செய்து வருகின்றன. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ‘நானும் காவலர்’ என்ற கோஷத்தை மோடி கீச்சகம் மூலம் பரப்பி வருகிறார். பா.ஜனதா ஆதரவாளர்கள் தங்களது பெயருக்கு முன்னால் ‘காவலர்’ என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இந்த நிலையிலேயே மோடி ‘நானும் காவலர்’ என்ற கோஷத்தைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டாம் என்று பணிவுடன் கூறுகிறேன். ‘காவலரே களவாடிவிட்டார்’ என்ற எதிர்க்கட்சிகளின் கோஷத்தில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று சத்ருகன் சின்கா தெரிவித்தார்.

- காவலர்களுக்கு மனநல ஆலோசனை
- தமிழகத்துக்குத் தனிச் செயற்கைக்கோள்
- கூடங்குளம் அணு உலை கைவிடப்படும்

## அ.ம.மு.காவின் தேர்தல் வாக்குறுதிகள் வெளியாகின

அ.ம.மு.காவின் துணைப் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் நேற்று அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் திட்டங்களுக்கு அனுமதியில்லை, அனைத்து விவசாயக் கடன்களும் தள்ளுபடி, தமிழகத்துக்குத் தனிச் செயற்கைக்கோள் ஏவப்படும், காவலர்களுக்கு உரிய மனநல ஆலோசனை, கூடங்குளம் அணு உலை விரிவாக்கம் கைவிடப்படும். எதிர்ப்பு போராட்டத்தின் போது பொதுமக்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் மீளப் பெறப்படும் என்பவை உள்ளிட்ட 25வரையான வாக்குறுதிகள் குறித்து ரைக்கப்பட்டது. நரேந்திர மோடி உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் தங்களைக் ‘காவலர்கள்’ என அறிவித்து வரும் நிலையில் அ.ம.மு.காவின் தேர்தல் வாக்குறுதிகளில் காவலர்களுக்கு மன நல ஆலோசனை என்று குறிப்பிட்டிருப்பது பற்றி அதிகம் சிலாகிக்க கப்படுகிறது.

## 8 தொகுதிகளைக் கூட வெல்ல முடியாது அ.தி.மு.க. ஆட்சி தலைகுப்புறக் கவிழும்

தினகரன் பேட்டி



ஆண்ட கட்சி, ஆளும் கட்சியை மக்கள் வெறுக்கிறார்கள், மீதேனைக் கொண்டுவந்தது காங்கிரஸ் கட்சி. கையெழுத்துப் போட்டவர் ஸ்ராலின் என டிடிவி தினகரன் கூறினார். சென்னையில் அ.ம.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின் செய்தியாளர்களிடம் டிடிவி தினகரன் பேசியதாவது:
“தனித்து நின்று நாங்கள் களம் காண்கிறோம். இந்தத் தேர்தலில் வியூகம் என்று ஒன்றுமில்லை. மக்கள்தான் தீர்மானிப்பார்கள்.
பணம், வி.ஐ.பி. எல்லாம் இந்தத் தேர்தலைத் தீர்மானிக்காது. 2014ஆம் ஆண்டில் பா.ஜ.காவுக்கு மக்கள் ஆதரவளித்தார்கள். தற்போது பா.ஜ.க. மீது கோபம் உள்ளது. நிச்சயம் பாஜகவை வீட்டுக்கு அனுப்புவார்கள்.
மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். தமிழ்நாட்டுப் பிரச்சினையில் தேசியக் கட்சிகள் தீர்வைக் கொண்டு வரமுடியாது. மாநிலப் பிரச்சினைகளுக்கு மாநிலக் கட்சிகள்தான் போராடும் என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.
அ.தி.மு.காவினரால் 8 தொகுதிகளைக் கண்டிப்பாக வெல்லவே முடியாது. கண்டிப்பாக அந்த ஆட்சி தலை குப்புற கவிழப் போகிறது. யாரும் கவிழ்க்க வேண்டாம் தானாக அது நடக்கும்” என்று தினகரன் பேசினார்.

## 7 பேரின் விடுதலை சாத்தியமே இல்லை தி.மு.க. அறிக்கையை குப்பையில் போடுங்கள்

சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு



சென்னை,மார்ச் 23
இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள எழுவர் விடுதலை சாத்தியமே இல்லை என நாடாளுமன்ற உறுப்பினரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான சுப்பிரமணியன் சுவாமி உறுதிப்படத் தெரிவித்தார். சென்னை வானூர்தி நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது சுப்பிரமணியன் சுவாமி இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.
“ராஜீவ் காந்தி கொலைகாரர்களை விடமாட்டோம். என்ன ஆனாலும் விடுதலை கிடையாது. எழுவர் விடுதலை குறித்துக் கூறப்பட்டுள்ள தி.மு.க. அறிக்கையைத் தூக்கிக் குப்பைத்தொட்டியில் போடுங்கள். அவர்களை விடவே மாட்டோம். மாநில மதிப்பில் இருக்கிற தமிழிசைக்கு டெல்லியின் கொள்கைகள் தெரியாது. இதுகுறித்து டெல்லிதான் முடிவு செய்ய வேண்டும். எழுவர் விடுதலைக்கு டெல்லி ஒத்துக் கொள்ளாது. 7 பேர் விடுதலை சாத்தியமே இல்லை, அது நடக்காது” என்றார்

## ஜெயலலிதாவின் சாவுக்குக் காரணமானோருக்குச் சிறை

தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் நடவடிக்கை



தஞ்சாவூர்,மார்ச் 23
தி.மு.க. ஆட்சிக்கு வந்த அடுத்த விநாடியே தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவுடன் தொடர்புடையவர்கள் சிறைக்குச் செல்வார்கள் எனத் தஞ்சாவூரில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தி.மு.க.தலைவர் மு.க.ஸ்ராலின் தெரிவித்தார். தஞ்சாவூரில் தி.மு.க. கூட்டணி சார்பில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய போதே ஸ்ராலின் இவ்வாறு தெரிவித்தார். அப்போது அவர், ஊழல், லஞ்சம், கொலை, பாலியல் பலாத்காரம் எனத் தொடரும் இந்த ஆட்சியில், ஜெயலலிதா சாவு குறித்து நடைபெறும் விசாரணை நியாயமாக நடைபெறாது என எல்லோருக்கும் தெரியும். தி.மு.க. ஆட்சிக்கு வந்த அடுத்த விநாடியே ஜெயலலிதாவின் சாவுக்குக் காரணமானவர்களைச் சிறையில் அடைப்போம் என்றார்.

## இன்றைய நாள்

**மேடம்:** நல்லோரின் ஆலோசனையால் மனதில் நம்பிக்கை கூடும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக கூடுதலாக பாடுபடுவீர்கள். உபரி பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**இடபம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில் அதிக நேரம் பணிபுரிய வேண்டியதிருக்கும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயலால் பெற்றோருக்கு பெருமை உண்டாகும்.

**மிதுனம்:** சுற்றுப்புறச் சூழ்நிலையால் தொந்தரவு ஏற்படலாம். நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** குடும்பத்தினரின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய உத்திகளைப் பயன்படுத்துவீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது அவசியம்.

**கன்னி:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**துலாம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிக உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர்.

**விருச்சிகம்:** புத்துணர்வுடன் வாழ்வை எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறையும். நிலுவைப்பணம் வசூலாகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** நிலுவைப் பணிகளை ஞாபகப்படுத்தி நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** மனக் குழப்பத்தால் பணிகளில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** எதிர்பாராத புதிய பொறுப்பை ஏற்க நேரிடலாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** கருணையால் உறவினருக்கு உதவ முன்வருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

# வலைப்பந்தாட்ட தொடரில் ஐக்கிய வி.கழகம் சம்பியன்



கரணவாய், மார்ச் 23
பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று வல்வை. நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின.
பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் முதற்பாதியில் 9:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாகப் போராடினை. இறுதியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 18:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (எ-108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 23
வல்வை சனசமூக சேவா நிலையத்தின் பவள விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்ததும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றன.
இரவு 73.0 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாகம் நியூவாரியஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கம்பன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறுகின்றன.
இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 3 .30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கிளிநொச்சி உதய தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு நடக்கும் ஆட்டத்தில் இரணைமடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

கம்பர் மலை கலா வாணி சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட்வர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று சனிக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கனை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தப்படுகின்ற ரி20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஜ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு தேசிய ரீதியாக நடத்தும் செற்அப் முறையிலான கரப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளன. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 23
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்தும் ஆண்களுக்கான திறந்த பிரிவு முறையிலான பூப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் அரியாலை சரஸ்வதி சனசமூக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மார்ச் 23
வல்வெட்டித்துறை வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் வடக்கின் மென்பந்தாட்ட அரசின் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (எ-23)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம் மார்ச்23
ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கப்டன் சோமசுந்தரம் வெற்றி க்கிண்ணத்துக்கான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் ஏபி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி மோதவுள்ளது. (எ-23)

## சென்.மேரிஸை வெற்றிகொண்டு இறுதிக்குத் தெரிவானது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதற்பாதி ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் கோல் எதுவும் பெறவில்லை. இரண்டாம் பாதி ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியின் அருள்தர்சன் கோல் ஒன்றைப் பதிவு செய்தார். அதன்பின்னர் இரு அணிகளும்கடுமையாக முயற்சித்தபோதும் கோல் எதையும் பெறவில்லை. ஆட்ட நேர முடிவில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது. (எ-23)



## வலய மட்ட எல்லேயில் சம்பியனானது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணம் கல்வி வலய மட்டத்தில் நடந்த எல்லே போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.
யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவுக்கான எல்லே தொடரின் இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி 3 ஓட்டங்களைப் பெற்றது. 4 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 3 ஓட்டங்களையே பெற்றனர்.
அதையடுத்து வெற்றி. தோல்வியைத் தீர்மானிப்பதற்கு இரு அணியினருக்கும் தலா 10 பந்துகள் வழங்கப்பட்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புத்தூர் வாதரவத்தை வித்தியாலய அணியினர் எந்த ஓட்டத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவானது. (எ-23)

வடக்கின் நாயகன் தொடரில்

## முன்னேறியது சென்.தோமஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 23
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் 6:1 என்ற கோல் கணக்கில் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)

## பூப்பந்தாட்ட தொடரில் யாழ்ப்பாண இணை வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 23
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட்ட கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு- கிழக்கு மாகாண ரீதியாக நடத்திய பூப்பந்தாட்ட தொடரின் 40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய காண்டீபன் குகதாஸ் இணை கிண்ணம் வென்றது.
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய எஸ்.காண்டீபன், குகதாஸ் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய போல் டிஸ்னி.கண்ணன் இணையை 21:19, 21.18 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றனர். (எ-23)



## ஷேன் வோர்னுக்கு லாமிசன் புகழாரம்

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்னுக்கு, நேபாள கிரிக்கெட் அணி வீரர் சந்தீப் லாமிசன் புகழாரம் சூட்டியுள்ளார்.

12ஆவது ஐ.பி.எல். போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் அணிக்காக நேபாள வீரர் சந்தீப் லாமிசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்:

சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னைப் பார்த்து நான் பந்து வீசக் கற்றுக்கொண்டேன். அவர் தான் எனது மானசீக குரு. அவரை நேரில் பார்த்தபோது அவரிடமிருந்து பல்வேறு பந்து வீச்சு தொழில்நுட்ப விடயங்களைக் கற்றுக்கொண்டேன். சுழற்பந்து வீச்சில் அவர் மிகப் பெரிய ஜாம்பவான். அவரைப் பின்பற்றி பந்துவீச ஆசைப்படுகிறேன். பந்துவீச்சில் என்னை மேம்படுத்துவதற்கு அவர் பல உத்திகளை கூறினார். மிகவும் தைரியத்துடன் பந்துவீச அவர் கற்றுத்தந்தார். பந்துவீசும்போது தைரியம் மிகவும் முக்கியம் என்பதை எனக்கு அவர் புரிய வைத்தார்.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் பிக்பாஷ் ரி-20 போட்டியிலும் விளையாடினேன். இது எனக்கு நல்ல அனுபவங்களைப் பெற்றுத் தந்தது. அந்த அனுபவம் இந்த ஐ.பி.எல். போட்டியின் போது பெரிதும் உதவு என எதிர்பார்க்கின்றேன்.

ஐ.பி.எல். போட்டி பல வீரர்களுக்கு மிகப்பெரிய தளமாக இருந்து உதவி வருகிறது. என்னைப் போன்ற இளம் வீரர்களுக்கு இது மிகப்பெரிய போட்டித் தளம் - என்றார்.



## 5 கோல்கள் அடித்து அசத்தி வெற்றி கொண்டது றோயல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் 5:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

(எ-23)

# சரவெடி நிறைந்த ஐ.பி.எல். போட்டி






12ஆவது ஐ.பி.எல். தொடர் இன்று ஆரம்பமாகின்றது. ஐ.பி.எல். போட்டி என்றாலே அதிரடி சரவெடி வீரர்கள் மீதுதான் கவனம் இருக்கும். ஆனால் இதிலும் வில்லியர்ஸ், விராட் கோஹ்லி போன்ற 'கலைநுட்ப' வீரர்களும் உள்ளனர். ஆனாலும் கிறிஸ் கெய்ல், பொலார்ட், டோனி எனும் போது கோஹ்லி, வில்லியர்ஸைக் காட்டிலும் ரசிகர்களிடையே ஒரு பிரமிப்பு உள்ளது. கிரிக்கெட் நுட்பத்துடன் பார்ப்பவர்களுக்கு கோஹ்லி, வில்லியர்ஸ் பிரமிப்பூட்டுபவர்களாகத் தெரிவார்கள்.

ஆனால் ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கு வளம் சேர்ப்பது இந்த 'ஹிட்டர்கள்' பறக்க விடும் ஆறு ஓட்டங்களும் நான்கு ஓட்டங்களும் சாதனைகளும்தான். இந்த ஹிட்டர்களால் தான் அதீத இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரே போட்டியில் இதே ஹிட்டர்களால் தான் பெரிய இலக்குகளும் விரட்டப்படுகின்றன.

ஐ.பி.எல். போட்டியில் 8 அணிகளிலும் பல ஹிட்டர்கள் இருந்தாலும் , சில ஹிட்டர்கள் மீதுதான் ரசிகர்களின் கவனம் குவியும். இவர்கள் அத்தகைய போட்டிகளை வென்று கொடுத்துள்ளனர்.

டோனியை முன்னரைப் போல் ஹிட்டர் பட்டியலில் சேர்க்க முடியுமா என்றாலும் இந்தியாவுக்கு எதிராக டோனி ஆடும்போது தரமான எதிரணியினரின் பந்து வீச்சுக்கு எதிரான அவரது தடுமாற்றங்கள் அவர் மஞ்சள் உடையில் ஆடும்போது இருக்காது. அதுவும் கடந்த ஐ.பி.எல். தொடரில் 400க்கும் அதிகமான ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

**கெய்ல்**

கெய்ல் என்றாலே சிச்சர் மழைதான் ரசிகர்களுக்கு ஞாபகம் வரும். இவர் மிகப் பெரிய ஹிட்டர்களில் ஒருவராகக்காணப்படுகின்றார். பந்துகளை எல்லைக் கோட்டுக்கு வெளியே இலகுவாக அனுப்பும் திறன் கொண்ட வீரர்.

**டோனி**

டோனி என்றாலே 'ஹெலிகொப்ரர் ஷாட்' என்று ரசிகர்கள் வந்து விட்டனர். டோனி என்றாலே ஆட்டத்தை இறுதிவரை கொண்டு சென்று வெற்றி பெற வைப்பது என்ற ஒரு படிமம் ரசிகர்களிடத்தில் நிலைத்து விட்டது.

**வில்லியர்ஸ்**

வில்லியர்ஸ் என்றால் 360 டிகிரி துடுப்பாட்ட வீரர் என்று பெயர் எடுத்தவர். அச்சுறுத்தும் அதிரடி வீரர். இவரது துடுப்பாட்டத்துக்கு எவரும் நிகரில்லை. இவருடைய இன்னொரு திறமை அசாத்தியமான பிடியெடுப்புக்களை எடுப்பது.

**பொலார்ட்**

மும்பை இந்தியன்ஸ் அணியை பல இக்கட்டான தருணங்களிலிருந்து மீட்டு வெற்றி பெறச் செய்துள்ள சகலதுறை ஆட்டக்காரார் பொலார்ட். இவர் மிகப் பெரிய ஹிட்டர்களில் ஒருவராக விளங்குகின்றார்.

**பட்லர்**

கடந்த ஐ.பி.எல். தொடரில் முதல் பகுதிகளில் தடுமாறிய ராஜஸ்தான் றோயல் அணியை பிற்பகுதியில் முன்கள வீரராக இறங்கி வெளுத்து வாங்கி முன்னேற்றினார். இங்கிலாந்தின் மதிப்பு மிக்க ரி-20 கிரிக்கெட் வீரர் என்று பெயர் எடுத்தவர் இவர்.

**கிறிஸ் மோரிஸ்**

தென்னாபிரிக்கா அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் மோரிஸ் டெல்லி கேபிடல்ஸ் அணியின் தூணாகத் திகழ்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் எல்லைக்கோட்டுக்கு வெளியே எந்தப் பந்து வீச்சாளர்களின் பந்துகளையும் தூக்கி வெளியே அடிப்பதில் பெயர் போனவர்.

## கிங்ஸ் லெவன் பஞ்சாப்; ஆரம்ப இணை சிறப்பு

ஐ.பி.எல். போட்டி வரலாற்றில் 2008, 2014ஆம் ஆண்டு போட்டிகளைத் தவிர இதுவரை குறிப்பிடத்தகுந்த சாதனையை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி படைக்கவில்லை. 2008இல் அரையிறுதி வரையும், 2014இல் இரண்டாம் இடத்தையும் பஞ்சாப் அணி பிடித்தது. ஏனைய ஆண்டு இடம்பெற்ற போட்டிகள் அனைத்திலும் லீக் சுற்றிலேயே அந்த அணி வெளியேறியது.

இந்த அணியில் 15 இந்திய வீரர்களும், 8 வெளிநாட்டு வீரர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**பலம்**

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கே.எல்.ராகுல், கிறிஸ் கெய்ல் களமிறங்குவது அணிக்கு கூடுதல் பலம். இடது,வலது கூட்டணியில் இந்த ஜோடி அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தும். இவர்களுக்கு பந்துவீசுவது எதிரணி வீரர்களுக்கு மிகவும் சிரமம். இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் அபாரமாக விளையாடிய கெய்ல், ஐ.பி.எல். தொடரிலும் முத்திரை பதிக்கக் காத்திருக்கிறார். இங்கிலாந்து தொடரில் அவர் 5 இன்னிங்ஸ்களில் 424 ஓட்டங்களைக் குவித்தார். இதேபோல ராகுலின் ஆட்டமும் அணிக்கு கூடுதல் பலம்.

முஜிப் உர் ரஹ்மான், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பிக் பாஷ் தொடரில் பிரிஸ்பேன் ஹீட் அணிக்காக சிறப்பாக பந்துவீசினார். அவரது சுழற்பந்து வீச்சு அணிக்கு நிச்சயம் கூடுதல் பலமளிக்கக்கூடியது. ஆர்.அஸ்வின், எம்.அஸ்வின், ஆண்ட்ரு டை ஆகியோர் அணியின் தூண்களாக உள்ளனர்.

**பலவீனம்**

அணியின் பலவீனமாக இருப்பது வேகப்பந்துவீச்சு தான். இந்த அணியில் ஆண்ட்ரு டை, மொகமது ஷமியைத் தவிர ஏனைய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அனுபவம் மிகக் குறைவு.

அங்கித் ராஜ்புத், அர்ஷ்தீப் சிங், ஹர்துஸ் வில்ஜேயன் ஆகியோர் குறைந்த அனுபவம் உடையவர்கள். அவர்களது பந்துவீச்சு இந்தத் தொடரில் எந்த அளவுக்கு பங்காற்றும் என்பது தெரியவில்லை.



## கிண்ணத்தை தக்க வைப்போம்

### பிளெமிங் தெரிவிப்பு

கடந்த ஐ.பி.எல். போட்டித் தொடருக்கு முன் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி கிண்ணம் நமதே என்று விளம்பரம் செய்து அந்த அணிக்கு மிக மோசமான தொடராக அமைந்தது கடந்த ஐ.பி.எல்.

இதனை விராட் கோஹ்லியே சில நாள்களுக்கு முன் 'தொடருக்கு முன்பே அப்படியெல்லாம் பேசக்கூடாது, ஏனைய அணிகளும் இருக்கின்றன' என்று சற்று கோபத்துடனே அந்த விளம்பர உத்தியைக் கேள்விக்குட்படுத்தினார்.

இது குறித்து சென்னை அணியின் ஆலோசகர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவிக்கையில்;

கடந்த முறை வென்ற கிண்ணத்தைத் தக்கவைப்போம், கிண்ணத்தை இந்த முறையும் வெல்வோம் என்றெல்லாம் நாங்கள் சொல்ல மாட்டோம். வெற்றி பெறுவது என்பது எவ்வளவு கடினம் என்பதை தெரிந்த மிக எளிமையானவர்கள் நாங்கள்.

கடந்த முறை நாங்கள் பெரிய தருணங்களை வென்றெடுத்தோம். அணிப்பண்பாட்டில் சில நடைமுறைகளைக் கையாண்டோம். பெரிய தருணங்களில் போட்டியை வெற்றி பெற்றுக் கொடுக்க அந்தந்த வீரர்களின் கையில பொறுப்பை ஒப்படைத்தோம். டோனி கடந்த ஆண்டு பெரும்பாலும் 4ஆம் நிலையில் களமிறங்கினார். ஆனால் இந்த ஐ.பி.எல்லில் அவரை தேவைக்கேற்ப களமிறக்க இருக்கிறோம் - என்றார்.

## முக்கிய வீரர்களின் இறுதி ஐ.பி.எல்.

ஐ.பி.எல். போட்டி இன்று ஆரம்பமாகின்றது. இந்த ஐ.பி.எல். தொடர் பல முக்கிய வீரர்களுக்கு இறுதித் தொடராக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறு அணிகளைச் சேர்ந்த 5 முக்கிய வீரர்கள் இதனுள் உள்ளடங்குகின்றனர்.





சில வீரர்கள் மட்டுமே நீண்டகாலமாக அணியில் தொடர்ந்து வருகின்றனர். ஆனால், வயது மூப்பு, களத்தில் பிரகாசிக்க முடியாமை, இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டிய கட்டாயம் போன்ற காரணங்களால் இவர்கள் விலகுவதற்கான காரணமாக பார்க்கப்படுகின்றது. அவர்களுள் யுவராஜ்சிங், வோட்சன், வில்லியர்ஸ், கிறிஸ் கெய்ல், இம்ரான் தாஹிர் போன்ற வீரர்களுக்கே இந்த ஐ.பி.எல். தொடர் இறுதி தொடராக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# எந்த இடத்திலும் களமிறங்குவேன்

## கூறுகிறார் பின்ஞ்

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர்களான சிமித், வோர்னர் ஆகியோர் பந்தை சேதப்படுத்தி விவகாரத்தில் ஓராண்டு தடை விதிக்கப்பட்டு பன்னாட்டுப் போட்டிகளில் விளையாடவில்லை. இதனால் அந்த அணியின் வீரர் ஆரோன் பிஞ்ச் அணித் தலைவராக பொறுப்பேற்றார். இருவர் மீதான தடைக்காலம் முடிவடைகின்ற நிலையில், உலகக் கிண்ண ஆஸ்திரேலிய அணியில் இருவரும் விளையாட வாய்ப்புள்ளது. அவர்கள் இருவரும் அணியில் இடம்பிடித்தால், வோர்னர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களம் இறங்குவார். சிமித் 3ஆவது வீரராக களம் இறங்குவார். இருவரும் களம் இறங்கும்போது பிஞ்ச் எந்த இடத்தில் களம் இறங்குவார் என்ற கேள்வி எழுந்தது. இது குறித்து பின்ஞ் தெரிவிக்கையில்; என்னை வெது இடத்தில் களம் இறங்கி துடுப்பெடுத்தாடச் சொன்னால் கூட அதில் களம் இறங்குவேன். மூன்று அல்லது நான்கு என்பது முக்கியமல்ல. இருவருக்காகவும் எந்த இடத்திலும் களமிறங்கத் தயாராக உள்ளேன்- என்றார்.




# கிரிக்கெட்டுக்கு துரோகமிழைப்பது கொலைக் குற்றத்தை விட மோசம்

## சூதாட்ட விவகாரம் தொடர்பில் டோனி கவலை



2013ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐ.பி.எல். போட்டியில் 'ஸ்பாட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் சென்னை அணிக்கும், ராஜஸ்தான் அணிக்கும் 2 வருட தடை விதிக்கப்பட்டது. அத்தோடு ராஜஸ்தான் ரோயல் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கித் சவான் ஆகியோருக்கும் தடை விதிக்கப்பட்டது.

2 வருட தடையின் பின்னர் கடந்த ஐ.பி.எல். போட்டியில் சென்னை, ராஜஸ்தான் ரோயல் அணிகள் களமிறங்கியது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து டோனி தெரிவிக்கையில்;

2013ஆம் ஆண்டு என் வாழ்வில் மிகவும் கடினமான காலகட்டமாகும். அப்போது நான் அனுபவித்த வேதனையை போல் அதற்கு முன்பு ஒருபோதும் அனுபவித்தது கிடையாது. 2007ஆம் ஆண்டு உலக கிண்ணப் போட்டியில் நாங்கள் தோல்வி அடைந்து வெளியேறி கடுமையான விமர்சனத்துக் குள்ளானோம். ஆனால் 2013ஆம் ஆண்டில் நடந்த விடயம் இதற்கு முற்றிலும் மாறானது. மேட்ச் பிக்சிங், ஸ்பாட் பிக்சிங் குறித்து மக்கள் பேசினார்கள். நாட்டிலேயே அதிகம் பேசப்படும் பொருளாக அது தான் இருந்தது. சூதாட்ட விவகாரத்துக்காக வழங்கப்பட்ட தண்டனை சரியானது தான். ஆனால் வழங்கப்பட்ட தண்டனையின் அளவு சரியானதா? என்ற கேள்வி எழுகிறது. சென்னை அணிக்கு 2 வருட தடை விதிக்கப்பட்டதால் மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானேன். இந்த விடயத்தில் அணி வீரர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பது தான் எனது கேள்வி.

நான் இன்று இந்த நிலைக்கு உயர்ந்து இருப்பதற்கும், சாதித்து இருப்பதற்கும் கிரிக்கெட் தான் காரணம். என்னை பொறுத்தவரை கொலை தான் பெரிய குற்றம் என்று நான் சொல்லமாட்டேன். கிரிக்கெட்டுக்கு துரோகம் செய்து 'மேட்ச் பிக்சிங்' செய்வது கொலையை காட்டிலும் பெரிய குற்றம். நான் அந்த குற்றத்தில் ஈடுபட்டு இருந்தால் அது எனக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும். என் வாழ்க்கையில் இது போன்ற கடினமான விடயங்களை இதற்கு முன் நான் சந்தித்ததில்லை. மேலும் இத்தகைய பிரச்சினைகளை மனதில் வைத்து கொண்டு தொடர்ந்து சிறப்பாக செயல்படுவது என்பது எளிதான காரியம் அல்ல -என்றார்.

**கார் விற்பனைக்கு**
Honda Civic 2000Model கார் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. பார்த்த பின் விலை பேசித் தீர்மானிக்கலாம்.
077 875 8595
(CS 24194)(14.17)

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
★ சுத்திகரிப்பாளர்கள்
ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் 24.03.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
ES பிறிண்டர்ஸ்
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.03.2019 | வெற்றி வாரம் 2483 | வர்ணம் நீலம்
மேடம் | வெற்றி இலக்கங்கள் 07 21 33 45
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 275, 034/=

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 422
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.22
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 117,980,848/-
G 10 42 62 77

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 562
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 23 25 40 44 W

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 944
சீட்டிழுப்பு திகதி 2019.03.21 வியாழக்கிழமை
M 08 38 55 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,614,280/



HONDA
விசேடசலுகைகளுடன் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு: (வரை. ஸ்டார் மோட்டார் (தனியார்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்.
RATNAM BROTHERS
A9 வீதி, கிளிநொச்சி, (கந்தசுவாமி கோயில் முன்பாக)
021 228 3485, 077 734 0056

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
டோமென் நாய்க்குட்டி விற்பனைக்கு 50 நாள். ஊசி போட்டது.
077 959 2945
(CS 24180)(14.17)

**காணி விற்பனைக்கு**
உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் பவர்ஸ்ரேசன் றோட்டில் 22 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 298 6612

**பெண்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.**
தையல் வகுப்புகள்
ஆரி எம்பிராய்டரி வகுப்புகள்
கேக் ஐசிங் வகுப்புகள்
பேசியல் வகுப்புகள்
மணப்பெண் அலங்காரம்.
பஷின் அக்கடமி
381, கஸ்தூரியார் வீதி(சந்தி) யாழ்ப்பாணம்.
(CB கணனிக்கல்வி நிலையம் அருகில்)
021 221 5115
fb.com/fashionacademylk

நகரில் சிறந்த பண சலுகை
MacBook Air 2018
Lightness strikes again.
The new thinner and lighter MacBook Air features a brilliant Retina display, Touch ID, the latest-generation keyboard, and a Force Touch trackpad.
iPad Pro
10.5-inch
With a wide range of capabilities, iPad will change the way you work.
Free Cover
* Terms & Conditions apply
Premium Service Provider Authorized Reseller
Bangladesh | Cambodia | Hong Kong | India | Malaysia | Myanmar | Nepal | Philippines | Sri Lanka | Vietnam
2009 - 2019 Local Apple Expert
FUTUREWORLD
Corporate Sales
077 3 523 894 (Lakmini)
076 7 052 144 (Shehan)
Service Support
011 2 588 242
077 3 766 707 (Manoj)
Support@futureworld.com.lk
COLOMBO 05 Showroom
No: 61/1, Lorensz Road
R.A.De mel Mawatha,
Colombo 05
Tel : 011 2 590 361
Fax : 011 2 592 020
077 4 443 144 (Navesh)
KANDY Showroom
No: L2-2A, Kandy City Center,
Dalada Veediya, Kandy
Tel : 081 2 201 099
Fax : 081 2 204 248
077 7 712 024 (Ashard)
JAFFNA Showroom
No: 70/72, Stanley Road, Jaffna
Tel : 021 2 219 655
021 2 219 655
077 7 439 772 (Ajith)



வடமாகாண வரி மதிப்பீட்டாளர் சுருத்தரங்கு
சனி (23/3) 9.00 am
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.